பக்கங்கள் : பதினான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 தை 11 செவ்வாய்க்கிழமை (24.01.2006)UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :58



கிளிநொச்சி வந்தடைந்த மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் தம்பதியர் ஹெலியிலிருந்து இறங்குவதையும் தளபதிகளும் போராளிகளும் அவர்களை அழைத்து வருவதையும் கலந்துரையாடுவதையும் படங்களில் காணலாம். *(படங்கள்: அலங்காரன்)*

# எங்குபேசுவது என்பதல்ல பிரச்சினை எதைப் பேசுவது என்பதுதான் சிக்கல்

## கொழும்பில் சொல்ஹெய்ம் கருத்து

கொழும்பு, ஜனவரி 24

வெளிப்படையாகச் சொல்லப்போனால் இலங்கைஅரசும், விடுதலைப்புலிகளும் எங்கு பேச்சை நடத்துவது என்பது ஒரு பெரிய பிரச்சினையே அல்ல. அது ஒரு சிக்கலுக்குரிய விவகாரமும் அல்ல. பிரச்சினையே என்னவென்றால் அவ்வாறு நேரடிச் சந்திப்பை மேற்கொள்ளும்போது முதலில் என் னென்னவற்றைப் பேசுவது என்பதுதான் இப்போதைக்கு சிக்கலுக்குரியது.

- இவ்வாறு தமது அவதானிப்பைத் தெரிவித்திருக்கிறார் இலங்கை இனப்பிரச்சினையில் அனுசரணைப் பணி வகிக்கும் நோர்வேயின் விசேட பிரதிநிதியும் அந்த நாட்டு அமைச்சருமான எரிக் சொல்ஹெய்ம்.

அமைதி முயற்சிகளை மீள ஆரம்பிப்பதற்கான வாய்ப்புகளை ஆராயும் பொருட்டு நான்கு நாள் விஜயமாக நேற்றுக்காலை கொழும்பு வந்து சேர்ந்த அவர், நேற்றுப் பல தரப்பினரையும் சந்தித்துப் பேச்சு நடத்தினார். அவற்றுக்கு இடையே வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்களின் கொழும்புச் செய்தியாளர்கள் மத்தியில் அவர் கருத்துரை வழங்கினார். அப்போதே

(14ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி வந்தடைந்த பாலா தலைவருடன் மந்திராலோசனை

கிளிநொச்சி,ஜன.24

நேற்றுக்காலை இலங்கை வந்தடைந்த புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கிளிநொச்சி வந்து சேர்ந்ததும் தலைவர் பிரபாகரனுடன் அமைதி முயற்சிகள் குறித்து மந்திராலோசனை நடத்தியிருக்கிறார்.

முன்னதாக நேற்று அதிகாலை மூன்று மணியளவில் கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்த பாலசிங்கம் தம்பதியினர் மற்றும் புலிகளின் லண்டன் பொறுப்பாளர் சாந்தன் ஆகியோர் விமான நிலையத்தை

(14ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரியில் இளம் வர்த்தகர் சுட்டுக்கொலை

தென்மராட்சி,ஜன.24

சாவகச்சேரி சந்தைப் பகுதியில் நேற்று நண்பகல் 1.15 மணியளவில் இளம் வர்த்தகர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கச்சாய் வீதியைச் சேர்ந்த சந்திரகாயன் திவ்வியதர்சன் (வயது 24) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

மீசாலையில் உள்ள தனது வர்த்தக நிலை

(14ஆம் பக்கம் பார்க்க)

## ரியூட்டறி இயக்குநர் சுட்டுக்கொலை

வவுனியா,ஜன.24

வ்வுனியாவில் நேற்று மாலை 5 மணிக்கு தனியார் கல்வி நிறுவன இயக்குநர் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

வீனஸ் கல்வி நிறுவன இயக்குநரான கனகசிங்கம் கமலச்சந்திரன் (வயது 35) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

நண்பர் ஒருவரின் கடைக்குச் சென்று

(14ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் பல தரப்புகளுடனும் அமெ. இணை அமைச்சர் பேச்சு

கொழும்பு, ஜன. 24

அமெரிக்க அரசியல்துறை இணையமைச்சர் நிக்கலஸ் பேர்ன்ஸ் நேற்றுக்காலை ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுகளை நடத்தியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் சுமார் ஒரு மணித்தியாலம் நடைபெற்ற இந்தப் பேச்சுகளின்போது, இலங்கையின் அமைதி முயற்சிகள் மற்றும் அதனுடன்

(14ஆம் பக்கம் பார்க்க)

## வன்முறைகள் ஊடாகத் தமது அரசியல் இலக்குகளை அடையும் முயற்சியைப் புலிகள் கைவிட வேண்டும்

### இலங்கை வந்துள்ள அமெரிக்க இணை அமைச்சர் கூறுகின்றார்

கொழும்பு, ஜன. 24

வன்முறைகள் ஊடாகத் தமது அரசியல் இலக்குகளை அடையும் நகர்வுகளைப் புலிகள் கைவிட்டு பேச்சு மேசைக்குத் திரும்பி அமைதி வழியில் இறுதிச் சமாதானத்தை அடைவதற்கு முன்வரவேண்டும்.

விடுதலைப் புலிகள், ஆயுத முனையின் ஊடாகத் தமது அரசியல் அபிலாஷைகளுக்குத் தீர்வைத் தேடும் வரைக்கும் அதனுடன் எமது அமெரிக்க அரசு எவ்வித உறவையும் வைத்துக்கொள்ளாது. சர்வதேசத்தின் ஏனைய நாடுகளும் புலிகளுடன் நல்லுறைவைப் பேணமாட்டா.

- இவ்வாறு தெரிவித்தார் இலங்கை வந்திருக்கும் அமெரிக்க அரசியல் விவகாரத்

(14ஆம் பக்கம் பார்க்க)

## முத்திரைச் சந்தி இளைஞர் கொலை: படையினரை ஆஜராக்குமாறு உத்தரவு

யாழ்ப்பாணம்,ஜன.24

முத்திரைச் சந்திப்பகுதியில் கடந்த மாதம் 28ஆம் திகதி படையினரால் 2 இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தில் சம்பந்தப்பட்ட படையினரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் நேற்று உத்தரவிட்டார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த கொழும்புத்துறையைச் சேர்ந்த யோகராசா கஜேந்திரன்,

(14ஆம் பக்கம் பார்க்க)

## இரு சிப்பாய்கள், ராசிக் குழு உறுப்பினர் மட்டு. ஊறணியில் கிளைமோரில் பலி!

ஏறாவூர், ஜன. 24

மட்டக்களப்பில் நேற்றுக்காலை இடம்பெற்ற கிளைமோர்க் குண்டுத் தாக்குதலில் இராணுவச் சிப்பாய்கள் இருவரும் ராசிக் குழு உறுப்பினர் ஒருவரும் கொல்லப்பட்டனர். இரண்டு பேர் படுகாயமடைந்தனர்.

நேற்றுக்காலை 7.40 மணியளவில் ஊறணி இராணுவ முகாமிற்கருகில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. மட்டக்களப்பு - வாழைச்

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பேச்சு மூலம் தீர்வை எட்டுவதற்கான
# இறுதிச் சந்தர்ப்பத்தை அரசு- விடுதலைப் புலிகள் இருதரப்பும் சரியாகப் பயன்படுத்த வேண்டும்
### அநுராதபுரம் ஆயர் வேண்டுகோள்



யாழ்ப்பாணம்,ஜன.24

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த இது இறுதிச் சந்தர்ப்பம். எனவே, அரசு - புலிகள் ஆகிய இரு தரப்புகளும் பேச்சு மூலம் நிரந்தரத் தீர்வொன்றை எட்டுவதற்கு இந்தச் சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். தென்னிலங்கையில் உள்ள பெரும்பாலான சிங்கள மக்களின் விருப்பமும் அதுவே.

- இவ்வாறு தெரிவித்தார் அநுராதபுரம் மறைமாவட்ட ஆயர் மேதகு நோபேட் அந்திராடி ஆண்டகை.

யாழ்ப்பாணத்துக்கு தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள அவர் நேற்று யாழ்.ஆயர் இல்லத்தில் வைத்து உதயனுக்கு சிறப்புச் செவ்வி ஒன்றை வழங்கினார். அதன்போதே அவர் மேற்படி கருத்தை வெளியிட்டார்.

அடுத்து வரும் நாள்கள் இலங்கையின் சமாதான முயற்சியில் மிகவும் முக்கியமானவை. தடைப்பட்டுள்ள அரசு - புலிகள் இடையிலான சமாதானப் பேச்சுகளை மீள ஆரம்பிப்பது தொடர்பாக இந்த நாள்களில் சமாதான அனுசரணையாளர்களும் அரச மற்றும் புலிகள் தரப்பினரும் முக்கிய முடிவுகளை எட்டவுள்ளனர். இந்தவேளையில் என்ன நிகழுமோ என்ற ஓர் ஏக்க உணர்வுடன் எல்லா மக்களும் தவித்துக்கொண்டிருக்கின்றனர். ஆகையால் இது ஓர் இறுதிச் சந்தர்ப்பம். சம்பந்தப்பட்ட இருதரப்பும் வெறும் வாய்ப்பேச்சுக்களை விட்டுவிட்டு ஒரு உறுதியான நிலைக்கு வருவதற்கு இதனைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் - என்றார் ஆயர் நோபேட் அந்திராடி.

அவர் வழங்கிய செவ்வியின் முழு விவரம் வருமாறு:-

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு பேச்சு மூலமே தீர்வு காண முடியும். அதில் எந்த மாற்றுக்கருத்தும் கிடையாது. தென்னிலங்கையில் உள்ள சிங்கள மக்களின் விருப்பமும் (13ஆம் பக்கம் பார்க்க)

## நால்வர் வீரச்சாவு

கிளிநொச்சி,ஜன.24

கடந்த காலங்களில் இடம்பெற்ற வெவ்வேறு சம்பவங்களின் போது வீரச்சாவடைந்த நால்வர் தொடர்பான விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

வீரச்சாவடைந்தோர் விவரம் வருமாறு:-

* 14.02.1987 அன்று கைதடிப் பகுதியில் தவறுதலாக இடம்பெற்ற வெடிவிபத்தில் நாட்டுப்பற்றாளர் சிவனேந்திரன் (வேலுப்பிள்ளை சிவனேந்திரன், சேர் பொன். இராமநாதன் வீதி, கலட்டி)
* 21.01.2006 அன்று முள்ளிக்குளம் பகுதியில் தவறுதலாக இடம்பெற்ற வெடிவிபத்தில் துணைப்படை வீரர் வீரவேங்கை ராஜ்குமார் (சித்திரவேல் ராஜ்குமார், சிவபுரம் கிராஞ்சி).
* 06.01.2006 அன்று ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் சுடப்பட்ட நாட்டுப்பற்றாளர் ஐயாத்துரை பாஸ்கரன், (கற்கோவளம் பருத்தித்துறை).
* 08.01.2006 அன்று 58ஆம் கட்டை மூதூர் பகுதியில் இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் மேஜர் மணாளன் (ஞானசேகரன் றேணுகரன், மேன்கமம், கிளிவெட்டி, மூதூர்). (3-203)

## செயன்முறைப் பரீட்சை பிற்போடப்பட்டது

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தால் நாளைமறுதினம் தொடக்கம் தொடர்ந்து 3 தினங்களுக்கு நடத்தப்படவிருந்த சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கான செயன்முறைப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது.

மோட்டார் வாகனப் பரிசோதகர் பயிற்சிக்காகக் கொழும்பு செல்வதால் இப்பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது.

நாளைமறுதினம் வியாழக்கிழமை நடைபெறவிருந்த பரீட்சை எதிர்வரும் முதலாம் திகதி காலை 9 மணிக்கும் -

எதிர்வரும் 27ஆம் திகதி நடைபெறவிருந்த பரீட்சை எதிர்வரும் முதலாம் திகதி பிற்பகல் 2 மணிக்கும் -

எதிர்வரும் 28ஆம் திகதி நடைபெறவிருந்த பரீட்சை எதிர்வரும் 2ஆம் திகதி காலை 9 மணிக்கும் நடைபெறும் என உதவி ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (3-202-203)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.24

2005/2006 கல்வியாண்டிற்கான யாழ். பல்கலைக்கழக அனுமதியின் கோட்டா குறைப்பு விவகாரத்துக்கு நிரந்தரத் தீர்வினைப் பெறும் நோக்கில் அனுமதியில் பாதிக்கப்பட்ட மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில் கலந்துரையாடல் இன்று நடத்தப்படவுள்ளது.

கல்வியியலாளர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட மாணவர்கள் கலந்துகொள்ளும் இக்கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும். (3-202)

# புதிதாக வேட்புமனுக்களைக் கோரியே குடாநாட்டில் உள்ளூராட்சித் தேர்தல்
### யாழ்.உதவித் தேர்தல் ஆணையாளர் தகவல்

யாழ்ப்பாணம்,ஜன.24

குடாநாட்டில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலுக்கு புதிதாக நியமனப் பத்திரங்கள் கோரப்படவுள்ளன.

இத் தகவலை யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்தார்.

நாடு முழுவதும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான ஏற்பாடுகள் தேர்தல் ஆணையாளர் மற்றும் உதவித் தேர்தல் ஆணையாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குடாநாட்டில் தேர்தலை நடத்துவது குறித்து யாழ்.உதவித் தேர்தல் ஆணையாளரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை முழுவதும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் கடந்த தடவை நடத்தப்பட்டபோது, குடாநாட்டிலும் பல கட்சிகள் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்திருந்தன. ஆனால், அக்காலப்பகுதியில் குடாநாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாகத் தேர்தல்கள் நடத்தப்படாது பிற்போடப்பட்டன.

தற்போது எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை குடாநாட்டிலும் நடத்துமாறு அரசு பணித்துள்ளது. அதற்கமைய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்பு மனுக்கள் புதிதாகக் கோரப்படவுள்ளன. ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்படும் என்றார். (3-202-203)

# படையினர் கைதுசெய்த இளைஞர் 20 தினங்களின் பின் பொலீஸாரிடம்
### கையளித்ததாக மனிதஉரிமை ஆணைக்குழுவுக்கு தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.24

கைதடிப் பகுதியில் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட இளைஞர் ஒருவர் 20 நாள்களின் பின் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் 22ஆம் திகதி கைதடியைச் சேர்ந்த முருகதாஸ் தீபரூபன் (வயது 19) என்பவர் நுணாவிலில் வைத்து இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டார். இந்நபரை தாம் கைதுசெய்யவில்லை என இராணுவத்தினர் மறுத்துவந்தனர்.

இவ்விடயம் தொடர்பாக சாவகச்சேரிப் பொலீஸ் அதிகாரிக்கும் மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தில் இடம்பெற்றது.

இச்சந்திப்பின் போதே மேற்படி இளைஞன் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டமை உண்மை என்பதும் -

இந்தமாதம் 12ஆம் திகதி அவரைத் தம்மிடம் இராணுவத்தினர் ஒப்படைத்தனர் என்றும் - பொலீஸார் தெரிவித்தனர்.

சாதாரண பொதுமக்கள் இராணுவத்தினராலோ, பொலீஸாராலோ கைதுசெய்யப்பட்டால் 48 மணித்தியாலத்திற்குள் மனித உரிமை ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்படவேண்டும்.

அத்துடன், இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டால் 24 மணித்தியாலயத்திற்குள் கைதுசெய்யப்பட்டவர் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்படவேண்டும்.

இவ்விரு சட்டமுறைகளையும் சம்பந்தப்பட்டோர் மீறியுள்ளதனால், யாழ். மனித உரிமை ஆணைக்குழு தலைமை அலுவலகத்துடன் தொடர்புகொண்டு சம்பந்தப்பட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க முயற்சி மேற்கொள்ளப்படும் என்று ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன. (3-14)

# டோனி - பதான் புண்ணியத்தில் ஆபத்தைக் கடந்தது இந்தியா!

பைசலாபாத், ஜன.23

பைசலா பாத்தில் நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் மகேந்திரா சிங் டோனி, அணித் தலைவர் டிராவிட் ஆகியோரின் சதங்களுடன் இந்திய அணியும் ஓட்டங்களைக் குவித்து வருகின்றது.

நேற்று மதிய உணவுக்குப் பின்னர் தொடர்ந்தாடிய இந்திய அணி 11 ஓவர்களில் 45 ஓட்டங்களுக்குள் தனது முக்கிய நான்கு விக்கெட்டுக்களை இழந்தது. தத்தளித்துக் கொண்டிருந்த அணியை தனது அதிரடித் துடுப்பாட்டம் மூலம் தூக்கி நிறுத்தினார் மகேந்திரா சிங் டோனி. அவருக்குப் பக்கபலமாக பதான் நின்றாடினார்.

டோனி - பதான் ஜோடி 6ஆவது விக்கெட் இணைப்பாட்டமாக ஆட்டநேர முடிவு வரை 160 ஓட்டங்களை விளாசியது. இதன் மூலம் அணி 5 விக்கெட் இழப்புக்கு 441 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

முன்னதாக, பாகிஸ்தானின் முதல் இன்னிங்ஸ் ஓட்ட எண்ணிக்கையான 588இற்குப் பதிலளித்துத் தனது துடுப்பாட்டத்தை நேற்றுமுன்தினம் மதியத்தின் பின்னர் ஆரம்பித்த இந்திய அணி, ஆட்ட நேர முடிவின் போது ஒரு விக்கெட் இழப்புக்கு 110 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. நேற்றுக் காலை ஆட்டத்தைத் தொடர்ந்த அணித் தலைவர் டிராவிட் தனது சதத்தைப் பூர்த்தி செய்தார்.

டெஸ்ட் ஆட்டங்களில் துவக்க ஆட்டக்காரராகக் களமிறங்கி டிராவிட் பெற்றுள்ள இரண்டாவது சதம் (103) இதுவாகும். லஷ்மனுடன் இணைந்து இரண்டாவது விக்கெட்டுக்காக அவர் 197 ஓட்டங்களைப் பகிர்ந்து கொண்டார். இது பாகிஸ்தானுக்கு எதிராக இந்திய அணி இரணடாவது விக்கெட்டில் பெற்ற ஆகக் கூடுதலான ஓட்ட எண்ணிக்கைச் சாதனையாகும்.

இந்த ஜோடி மதிய இடைவேளையின் பின்னர் வெறும் மூன்று ஓவர்கள் இடைவெளியில் ஆட்டமிழந்து, தொடர்ந்து வந்த டெண்டுல்கர் (14), யுவராஜ்சிங் ([illegible]) ஆகியோர் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, மகேந்திர சிங் டோனியும் இர்பான் பதானும் அணிக்கு நம்பிக்கையூட்டினர்.

டோனி அதிரடியாக ஆடி 93 பந்துகளில் தனது சதத்தைப் (116) பூர்த்தி செய்தார். டெஸ்ட் ஆட்டம் ஒன்றில் அவர் பெற்ற முதல் சதம் இதுவாகும். அவருக்குத் உற்றதுணையாக பதான் (49) மறுமுனையில் நிதானமாக ஆடினார். இவர்களின் மிகச் சிறப்பான ஆட்டத்தால், இந்திய அணி ஆபத்தான கட்டத்தைத் தாண்டி ஓட்டங்களைக் குவித்தது.

இந்திய அணி வீரா ஒருவர் குறைந்த பந்துகளில் சதம் குவித்த சாதனையை இத் தொடரின் முதலாவது டெஸ்டில் சேவாக் புரிந்திருந்தார். அந்தச் சாதனையை டோனி இந்த டெஸ்டில் சமப்படுத்தினார்.

வேகப் பந்து வீச்சாளர் அக்தரின் 'பௌன்சர்' பந்துக்கும் சிக்ஸர் அடித்துத்தூள் கிளப்பினார் டோனி. 93 கிலோ மீற்றர் வேகத்தில் சீறி வந்த பந்தை அதே வேகத்தில் எல்லைக் கோட்டின் மேலாகப் பறக்க விட்டார் அவர். 4 சிக்ஸர்களும் 14 பவுண்டரிகளையும் விளாசினார்.

வெளிச்சம் போதாமை காரணமாக ஆட்டம் நிறுத்தப்படுவதற்கு முன்பாக ஆஸிப் வீசிய ஓவரில் பதான் (48) கொடுத்த பிடி வாய்ப்பு ஒன்றை விக்கெட் காப்பாளர் அக்மல் தவறவிட்டார். அதே பந்துவீச்சாளரின் பந்தில் டோனியும் (105) கொடுத்த பிடி ஒன்றை பாக். களத்தடுப்பாளர்கள் தவறவிட்டனர்.

# வன்னிக்கு இடம்பெயரும் மக்கள் அங்கேயே நிவாரணம் பெறவசதி

யாழ்ப்பாணம்,ஜன.24

குடாநாட்டில் தற்சமயம் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக இடம்பெயரும் மக்கள் அந்த அந்த மாவட்டங்களில் உலர்உணவு நிவாரணத்தைப் பெறமுடியும் என்று அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்து செல்பவர்கள் முதலில் தத்தமது பிரதேச் செயலகங்களில் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும்-

பதிவுகளை மேற்கொள்வது பல்வேறு வசதிகளைப் பெற உதவும் என்றும் - அரச அதிபர் தெரிவித்தார்.

பிரதேச செயலகங்களின் பதிவுப்படி இதுவரை 3 ஆயிரத்து 500க்கு மேற்பட்டவர்கள் வன்னிக்கு இடம்பெயர்ந்துள்ளமை தெரியவந்துள்ளது என்றும் -

இடம்பெயர்ந்தவர்கள் தங்கும் இடங்களில் நிவாரணத்தைப் பெற அந்த அந்த மாவட்டங்களின் அரச அதிபர்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது என்றும்- அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (3-202-203)

# மின் விநியோகம் சீரானது

'கூல் எயார்' நிறுவனத்தின் மின்மார்க்க ஆளி பழுதடைந்ததால் மின்தடை ஏற்பட்டது. அந்த ஆளி தற்காலிகமாகத் திருத்தப்பட்டு மின்விநியோகம் சீராக்கப்பட்டுள்ளது என்று மின்சாரசபையின் யாழ். அலுவலக அதிகாரி தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் காலை 6.15 மணியளவில் இந்த ஆளி பழுதடைந்ததாகவும் -

நேற்று நண்பகல் அளவில் பழுதடைந்த ஆளி தற்காலிகமாகத் திருத்தப்பட்டமையடுத்து நேற்றுப் பிற்பகல் மின்சார விநியோகம் வழமைக்குத் திரும்பியுள்ளது என அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இவ்விடயம் இலங்கை மின்சாரசபையின் தலைமைப்பீடத்திற்கு தெரியப்படுத்தப்பட்டதையடுத்து, இலங்கை மின்சாரசபை இரண்டு மின் உடைப்பான் ஆளிகளை வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஒருசில தினங்களில் அந்த ஆளிகள் இரண்டும் இங்கு எடுத்தவரப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

குடாநாட்டிற்கு மின்சாரம் கூல்எயார், அக்ரிக்கோ ஆகிய இரண்டு நிறுவனங்கள்மூலம் வழங்கப்பட்டுவருகின்றது.

கூல் எயார் நிறுவனத்தால் வழங்கப்பட்ட மின்சாரம் தடைப்பட்டதையடுத்து, அக்ரிக்கோ நிறுவனத்தால் வழங்கப்படும் மின்சாரம் சுழற்சி முறையில் நேற்றுமுன்தினம் காலைமுதல் நேற்று நண்பகல்வரை வழங்கப்பட்டது என மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன. (3-12-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# தொடரும் நாடகம் இது!

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுகள் நடக்குமா? நடக்குமானால் எங்கு நடக்கும்?

இதுபற்றிய முடிவு - தீர்மானம் - அடுத்த ஓரிரு நாள்களுக்குள் தெரியவந்துவிடும்.

அமைதி முயற்சிகளுக்குத் தீர்வுகாணும் அரசியல் செயற்பாடுகள் சூடுபிடிக்க ஆரம்பித்துவிட்டன. அவை பயன் தருமா, பயன்கெடுமா என்பது பெரும்பாலும் நாளை மறுதினம் வியாழக்கிழமை, நோர்வே அமைச்சர் எரிக் சொல்ஹெய்மின் இலங்கை விஜயம் முடிவுக்கு வரும்போது அம்பலமாகிவிடும்.

இந்த அரசியல் செயற்பாடுகளின் ஓர் அங்கமாக லண்டனிலிருந்து நேற்றுக்காலை வன்னி திரும்பிய புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்துடன் தலைவர் பிரபாகரன் ஆலோசனை கலந்துள்ளார். அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும் இந்த ஆலோசனைகளில் பங்குபற்றியுள்ளார்.

இதேசமயம், கொழும்பு வந்திருக்கும் நோர்வே அனுசரணைக் குழுவின் விசேட பிரதிநிதியும் அந்நாட்டு அமைச்சருமான எரிக் சொல்ஹெய்ம் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களுடனும் அரசுப் பிரமுகர்களுடனும் பேச்சு நடத்தி வருகின்றார். இன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் அவர் பேச்சு நடத்தவிருக்கின்றார்.

இப்போதைய அரசியல் நகர்வுகளின் முக்கிய அங்கம் நாளை இடம்பெறுகின்றது. அனுசரணையாளர் எரிக் சொல்ஹெய்ம், தலைவர் பிரபாகரனைச் சந்திக்கும் நிகழ்வு அது.

நீண்ட காலத்துக்குப் பின்னர் இடம்பெறும் சந்திப்பு இதுவென்றாலும், இதில் ஒரு புதிய விடயம் அமைந்திருக்கின்றது. புதிய அரசியல் நகர்வுக்கு இச்சந்திப்பு பிள்ளையார் சுழி போடுமா என்பதே கேள்வி.

இப்போதைய அரசியல் நகர்வுகள் கடந்த நான்கு வருடங்களாக இடம்பெற்ற சமாதான முயற்சிகளின் தொடராக இருக்கப் போவதில்லை.அது புதிய ஆரம்பம் என்று கூறிவிட்டார் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

"இது புதிய அரசு. புதிதாகப் பேசுவோம். புதிய அணுகுமுறையில் விடயங்களைக் கையாண்டு தீர்வு காண்போம். புதிய தொடங்குதலுக்கு ஆயத்தமாக வாருங்கள். நீங்கள் (புலிகள்) தனித்தமிழீழம் என்கிறீர்கள். நாங்கள் ஒற்றையாட்சி என்கிறோம். இதை வைத்துக்கொண்டு பேசத் தொடங்குவோம். புதிய தீர்வை இரண்டுக்கும் நடுவில் எட்டுவோம்." - என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியிருக்கிறார்.

இந்தக் கூற்றிலிருந்து தென்னிலங்கைத் தலைமை கூற வருவது என்ன? தென்னிலங்கைத் தலைமையிடமிருந்து தமிழர்கள் இதன்மூலம் படிக்கும் பாடம் என்ன?

தமிழரின் விடுதலைப் போராட்டம் ஆயுத வழிக்குத் திரும்பி காத்திரமான நிலையை நோக்கி நகரத்தொடங்கிய காலத்தின் பின்னர் தென்னிலங்கையின் பல தலைமைகளோடு தமிழர்கள் பேசியாயிற்று.

தமிழர்கள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவுடன் சமரச முயற்சியில் ஈடுபட்டனர்; ஜனாதிபதி பிரேமதாஸாவுடன் அமைதி நடவடிக்கைகளில் கலந்தனர்; ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் சமாதான எத்தனங்களை முன்னெடுத்தனர். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் யுத்தத்தை நிறுத்தி மூன்றாம் தரப்பு அனுசரணையுடன் பல சுற்றுப் பேச்சுகளை நடத்தினார்கள்.

இந்த முப்பது ஆண்டு காலத்தில் போராட்டத்துக்கு மத்தியில் முன்னெடுக்கப்பட்ட அமைதி முயற்சிகள் எல்லாம் என்னவாகின? அவற்றின் பெறுபேறுகள் எவை?

எல்லாம் ஆரவாரமாக ஆரம்பமாகி, 'சுத்திச் சுத்தி சுப்பரின் கொல்லைக்குள்' என்று முடிந்து விட்டன. அவ்வளவுதான்.

அதைத்தான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தற்போதைய கருத்து எடுத்துக் காட்டுகின்றது.

நான்கு ஆண்டுகள் யுத்தத்தை நிறுத்தி - ஆறு சுற்றுகள் - உலகின் பல்வேறு நாடுகளின் தலைநகரங்களில் அமர்ந்திருந்து பேசி - இணக்கம் கண்ட முடிவுகள் பலவும், ஏன் அனைத்துமே, நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பது ஒருபுறமிருக்க, அவையாவுமே வீண் - பயனற்ற - செயற்பாடுகள் என்பதை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இப்போது உறுதிப்படுத்தியிருக்கின்றார்.

சிங்களத் தலைமைகள் மாறி, மாறி ஆட்சிப்பீடம் ஏறுவதும், ஒவ்வொரு தலைமையும் ஆட்சிக்கு வந்ததும் படாடோபமாக அமைதித் தீர்வுக்கு எடுப்புக் காட்டுவதும், ஆனால் எட்டப்பட்ட முடிவுகளைக்கூட நடைமுறைப்படுத்தாமல் அவை காலத்தை இழுத்தடித்து, தமது ஆட்சிக்காலத்தை ஒப்பேற்றுவதும், தொடர்ந்து புதிய தலைமை ஆட்சிக்குவர பழைய முயற்சிகளைக் கிடப்பில் போட்டு, புதிய ஆரவாரத்துடன் புதிய ஆரம்பம் தொடர்வதுமாக 'தமிழர்களை ஏமாற்றும் சிங்களவரின் காதை' - 'சிறுபான்மையினரை ஏய்க்கும் பெரும்பான்மையினரின் நாடகம்' - தொடர்ந்து அரங்கேறிக்கொண்டிருக்கிறது.

அதில் புதிய அத்தியாயம் ஒன்றுக்கு - காட்சி ஒன்றுக்கு - திரையை இழுக்கத் தயாராகிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ.

'சமாதானத்துக்கான புதிய முயற்சி' என்ற அவரது பேச்சு தமிழர்களுக்கு அதைத்தான் உணர்த்தி நிற்கின்றது.

இத்தகைய இன்னொரு அத்தியாயத்துக்கு வாய்ப்பளிப்பதா? அல்லது நாடக மேடையை மூடிக்கொண்டு அடுத்த வேலையைப் பார்ப்பதா? - தலைவர் பிரபாகரன் இது விடயத்தில் எடுக்கும் முடிவு ஓரிரு நாள்களில் உலகுக்கு வெளியாகும் என எதிர்பார்க்கலாம்.

# கிழக்குப் பல்கலைக்கழக கல்விமான்கள் அச்சத்தால் நாட்டைவிட்டு வெளியேற்றம்!

மட்டக்களப்பு, ஜன.24

கருணா குழுவினரின் அச்சுறுத்தல்களை அடுத்து கிழக்குப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த 15பேராசிரியர்கள் நாட்டை விட்டு வெளியேறி உள்ளனர் என்று இணையத்தளம் ஒன்று தகவல் வெளியிட்டிருக்கிறது.

அந்த இணையத்தள செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கருணா குழுவால் படுகொலை செய்யப்பட்ட கிழக்குப் பல்கலைக்கழக பேராசிரியர் தம்பையாவின் மறைவை அடுத்து தொடர்ச்சியாக விடுக்கப்பட்ட கொலை அச்சுறுத்தல்களால் அச்சமடைந்த அந்த பல்கலைக்கழகத்தை சேர்ந்த சுமார் 15 பேராசிரியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

குறிப்பிட்ட பல்கலைக்கழகத்தில் தொடர்ந்தும் தனது கற்பித்தல் நடவடிக்கையை மேற்கொண்டு வரும் பேராசிரியர் ஒருவருக்கு அடையாளம் தெரியாத குழு ஒன்று விடுத்துவரும் தொடர்ச்சியான கொலை அச்சுறுத்தலை அடுத்து அவரும் நாட்டை விட்டு வெளியேறத் தயாராகி வருகிறார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2004ஆம் ஆண்டு மார்ச் மாதம் விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணா, தனது குழுவினரை கொண்டு மட்டக்களப்பிலிருந்து யாழ்ப்பாண மக்களை துரத்தியடித்தை அடுத்து கிழக்குப் பல்கலைக் கழக பொருளியல்துறை தலைவர் இடம்பெயர்ந்து சென்றுவிட்டு மீள வந்து பல்கலைக்கழகத்தில் தனது கற்பித்தல் செயற்பாட்டைத் தொடர்ந்தார். இதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு நகரில் வைத்து இவர் படுகொலை செய்யப்பட்டார்.

இதனை அடுத்த தமக்கு இதே கதி நேர்ந்துவிடுமோ என்ற அச்சத்தில் அந்த பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சுமார் 15 பேராசிரியர்கள் தமது குடும்பத்துடன் வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

தற்பொழுது அந்த பல்கலைக்கழகத்தில் விடுதலைப் புலிகளால் ஏற்பாடு செய்யப்படும் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வுக்கோ அல்லது வேறு நிகழ்ச்சிகளுக்கோ சமூகமளித்தால் ஜோசப் பரராஜசிங்கத்துக்கு நடந்த அதேகதிதான் நடக்கும் என்று அச்சுறுத்தும் துண்டுப் பிரசுரங்கள் ஒட்டப்பட்டுள்ளன என்றும் ஆசிரியர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள் ஆகியோருக்கு தொலைபேசிகள் மூலமும் அச்சுறுத்தல் விடப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் கிழக்கு கல்விச் சமூகம் பீதியில் உறைந்துபோயுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

-இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# படகில் தமிழகம் வருவதற்கு அஞ்சி விமானத்தில் வந்த ஈழ அகதிகள்

இராமநாதபுரம்,ஜன.24

படகில் வர அஞ்சி இலங்கையில் இருந்து விமானம் மூலம் சென்னை வந்தனர் இலங்கை அகதிகள் 5 பேர். இவர்கள், கொழும்பில் இருந்து 20 ஆம் திகதி சென்னை வந்தனர்.

சென்னையில் அகதிகள் மறுவாழ்வுத் துறை ஆணையாளரைச் சந்தித்த பின், மண்டபம் அகதிகள் முகாமுக்கு ஞாயிற்றுக்கிழமை வந்து சேர்ந்தனர்.

அவர்கள் யாழ்ப்பாணம் பகுதியைச் சேர்ந்த லோகேஸ்வரி (41), அவரது மகன்கள் மணிச்செல்வன் (20), மலைராஜ் (15), மகள் கலையரசி (25) அவரது மகன் மணிவண்ணன் (5) ஆகியோர் ஆவர்.

இலங்கையில் போர் அபாயம் ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து இராமேஸ்வரம் தீவுப் பகுதிக்கு அகதிகள் வருகை அதிகரித்துள்ளது. வெள்ளிக்கிழமை வரை 109 அகதிகள் வந்துள்ளனர். (ஐ)

# "அப்பு ஆச்சி ஆண்ட மண்ணில்" நூல் வெளியீட்டு விழா இன்று

யாழ்ப்பாணம்,ஜன.24

ந.பரமேஸ்வரன் எழுதி உதயனில் வெளியான "அப்பு ஆச்சி ஆண்ட மண்ணில்" என்ற வலிகாமம் வடக்குப் பற்றிய சிறப்புத்தொடர் நூல் வடிவம் பெற்றுள்ளது.

இந்த நூலின் வெளியீட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கையிலுள்ள யாழ். பல்கலைக்கழக ஊடகவளங்கள் பயிற்சி மையத்தில் இடம்பெறவுள்ளது.

ஊடகவள நிலையப் பணிப்பாளர் பேராசிரியர் அ.சண்சமுதாஸ் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் வெளியீட்டுரையை உதயன் பிரதம ஆசிரியரும், விமர்சனத்தை பேராசிரியர் என். சண்முகலிங்கனும் நிகழ்த்துவர்.

கீரிமலை நவரத்தின ஐயர் இராசேஸ்வரியம்மா தம்பதியரின் ஞாபகார்த்தமாக இந்த நூல் வெளியிடப்படுகிறது. வலி.வடக்கைப்பற்றி அறிந்து கொள்ள ஆர்வமுள்ளவர்கள் நூல்வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு நூலை இலவசமாகப் பெற்றுப்பயனடையலாம் என்று நூலாசிரியர் தெரிவித்துள்ளார். (அ)

# தர்மபுரத்தில் விபத்தில் மூவர் காயம்

யாழ்ப்பாணம், ஜன.24

கிளிநொச்சி தர்மபுரம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற மோட்டார்சைக்கிள் - சைக்கிள் விபத்தில் மூவர் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் தர்மபுரம் கட்டைக்காடு பகுதியைச் சேர்ந்தவர்களும் ஒரே சைக்கிளில் சென்றவர்களுமான மகாலிங்கம் குணரத்தினம் (வயது 32) அவரது பிள்ளைகளான குணரத்தினம் சுகன்யா (வயது 7) குரணத்தினம் பானுஷன் (வயது 4) ஆகிய மூவருமே படுகாமடைந்தவர்களாவர்.

கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவர்களில் பானுஷன் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (ஐ-15)

# பிரதேச அபிவிருத்தி கற்கைநெறிக்கான நேர்முகப்பரீட்சை

யாழ்ப்பாணம், ஜன.24

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீடத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பிரதேச அபிவிருத்திக் கற்கைகளுக்கான பட்டப் பின் முதுகலைமாணி கற்கைநெறிக்கான நேர்முகத்தேர்வு நேற்று இரண்டு அமர்வுகளாக இடம்பெற்றது.

யாழ்.பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புகள் பீடத்தில் நடைபெற்று வரும் இந்த நேர்முகத்தேர்வு தொடர்ந்து நான்கு நாள்களுக்கு நடைபெறவுள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை காலை அமர்வாகவும் நாளை புதன்கிழமை காலை, மாலை இரு அமர்வுகளாகவும் இறுதி நாள் வியாழக்கிழமை காலை அமர்வாகவும் நடைபெறவுள்ள இந் நேர்முகப்பரீட்சைக்கு 377 பேர் தோற்றவுள்ளனர்.

கடந்த 16ஆம் திகதி திங்கட்கிழமை முதல் நான்கு நாள்கள் இடம்பெற்ற பிரதேச திட்டமிடல் கற்கைநெறிக் கான நேர்முகத்தேர்விற்கு 480 பேர் அழைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-12)

## உதயவாக்கு

கஷ்டம் என்ற நிலத்தில்தான் திறமையான திறமான ஆண், பெண் குணவியல்புகள் துளிர் விட்டு வளர்கின்றன..

-டபிள்.யூ.மத்தியூ

## நாளை

தை 12
புதன்கிழமை
25.01.2006
திதி: ஏகாதசி
பின்னிரவு: 4.04 வரை
நட்சத்திரம் : அனுஷம்
பிற்பகல் : 3.17 வரை
ஏகாதசி விரதம்
[illegible]
[illegible]
(யாவும் பழைய நேரப்படி)






இராணுவ அச்சுறுத்தல்களுக்கு அஞ்சி குடாநாட்டை விட்டு வன்னிக்கு இடம்பெயர்ந்து செல்லும் பொதுமக்கள் பளைப் பகுதியில் வைத்து தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வாகனங்களில் ஏற்றிச் செல்லப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருப்பதால் வன்னிப் பாடசாலைகளில் இடநெருக்கடி

முழங்காவில்,ஜன.24

குடாநாட்டிலிருந்து இடம்பெயர்ந்து வன்னிப் பகுதிக்குச் வரும் மக்கள் இங்குள்ள பாடசாலைகளில் தற்காலிகமாகத் தங்கியிருக்கின்றனர். இதனால், பாடசாலைகளில் இட நெருக்கடிகள் ஏற்பட்டிருக்கின்றன.

இதுவரை 4 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் குடாநாட்டிலிருந்து வன்னிப் பகுதிக்கு இடம்பெயர்ந்துள்ளனர். அவர்களில் உறவினர்கள், நண்பர்களின் வீடுகளில் தங்கியிருப்போர் தவிர ஏனையோர் பொது நோக்கு மண்டபங்களிலும் பாடசாலைகளிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மத்திய கல்லூரியின் விடுதியில் ஒரு தொகுதி மக்கள் தங்கியிருக்கின்றனர்.

பூநகரி, வேரவில் இந்து மகாவித்தியாலயத்தில் அறுபதுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் தங்கியிருக்கின்றன. வகுப்பறைகள் சிலவற்றுக்குள்ளும் மக்கள் தங்கியிருப்பதால் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் சிறிது பாதிக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை -

இடம்பெயர்ந்து வரும் மக்கள் தமது பிள்ளைகளை வன்னிப் பாடசாலைகளில் சேர்த்து வருகின்றனர். இதனால் வகுப்புகளில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கின்றது என்று தெரிவிக்கப்பட்டது.

(த-323-352)

## முழங்காவிலில் தற்காப்புப் பயிற்சி

முழங்காவில் பிரதேச அமைப்புகளின் பிரதி நிதிகள் மற்றும் பொதுமக்களுக்கான தற்காப்புப் பயிற்சி நேற்றுமுன்தினம் முழங்காவில் மாவீரர் கலையரங்கில் நடைபெற்றது.

ஆண்களும் பெண்களுமாக சுமார் 70 பேர் அங்கு பயிற்சிகளைப் பெற்றுக்கொண்டனர். தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளன், கல்விக் கழக துணைப் பொறுப்பாளர் அருண் மாஸ்ரர் ஆகியோர் அங்கு சிறப்புரையாற்றினர். (த-291)

## அரச படைகளின் அத்துமீறலுக்கு ஒட்டுசுட்டானிலும் கண்டனம்

ஒட்டுசுட்டான்,ஜன.24

தமிழர் தாயகப் பகுதிகளில் ஸ்ரீலங்கா படையினர் மேற்கொண்டுவருகின்ற அடாவடித் தனங்களைக் கண்டித்து கடந்த 19ஆம் திகதி ஒட்டுசுட்டானில் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

ஒட்டுசுட்டான் நீர்ப்பாசன வளாகத்திலிருந்து மு.ப 10 மணிக்குப் பேரணி ஆரம்பமாகி ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் அலுவலகத்தைச் சென்றடைந்தது. அங்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் நா. வன்னியசிங்கம் தலைமையில் கண்டனக் கூட்டம் நடைபெற்றது.

ஒட்டுசுட்டான் கோட்டக் கல்வி அதிகாரி சி.ஜெயபாலன், ஆசிரியர் ரதீஸ்வரன் ஆகியோர் கண்டன உரைகளை நிகழ்த்தினர். அரசுக்கான மகஜர் ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டது. (த-341)




## இடைத்தங்கல் முகாமில் கல்வி நிலையம் திறப்பு

ஒட்டுசுட்டான்,ஜன.24

முல்லைத்தீவு, கள்ளப்பாடு கிராமத்தில் இடைத்தங்கல் முகாமில் தங்கியுள்ள மாணவர்களின் கல்வியறிவை மேம்படுத்தும் நோக்குடன் ஆழிப்பேரலையால் சாவடைந்த விக்னேஸ்வரன் நினைவாக கடந்த வாரம் கல்வி நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் மங்கள விளக்கினைக் கல்வி நிலைய நிர்வாகி சுதா ஏற்றி வைத்தார். பெயர்ப்பலகையினை கள்ளப்பாட்டைச் சேர்ந்த ம.பிறற்றிக் ஜோன்சன் திரைநீக்கம் செய்து வைத்தார். சாவடைந்த விக்னேஸ்வரனின் திருவுருவப்படத்திற்கு அவரது துணைவியார் சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்தார்.

இக்கல்வி நிலையத்தில் தரம் 3 முதல் தரம் 13 வரை சகல பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன.

(த-341)

## நிறுத்தல் அளவைக் கருவிகளுக்கு முத்திரையிடுமாறு அறிவுறுத்து

நிறுத்தல் அளவைக் கருவிகளுக்கு முத்திரையிடும் பணி நிதித்துறையின் வருவாய்ப்பகுதி நிறுத்தல் அளவைப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதன் ஒரு கட்டமாக முல்லைத்தீவு, செம்மலை, அளம்பில், தண்ணீர்ஊற்று, முள்ளியவளை ஆகிய பகுதிகளில் பயன்பாட்டிலுள்ள அனைத்து நிறுத்தல் அளவைக் கருவிகளையும் சரிபார்த்து முத்திரை இடும்பணிகள் கடந்த 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டன. இச்செயற்பாடு எதிர்வரும் ஐந்தாம் திகதி வரை மேற்கொள்ளப்பட இருக்கின்றது.

இந்த முத்திரையிடல் செயற்பாடானது தண்ணீர் ஊற்றிலுள்ள வருவாய்ப்பகுதி செயலகத்தின் நிறுத்தல் அளவைப் பிரிவில் நடைபெற்று வருகின்றது.

எனவே, மேற்குறிப்பிட்ட பகுதிகளில் நிறுத்தல் அளவைக் கருவிகளைப் பயன்படுத்தும் அனைவரும் குறித்த நாளில் அவற்றை முத்திரையிட்டுக் கொள்ளுமாறு நிதித் துறையின் வருவாய்ப்பகுதி நிறுத்தல் அளவைப் பிரிவின் ஆளுமை அலுவலர் கேட்டுள்ளார்.

(த-352)

## பேராறு கிராமத்தில் முன்பள்ளிக் கட்டடம்

ஒட்டுசுட்டான்,ஜன.24

'டெனிஸ்' அகதிகள் பேரவையின் நிதி உதவியுடன் ஒட்டுசுட்டான் பேராறு கிராமத்தில் மாலதி முன்பள்ளிக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.

கேணல் கிட்டு உட்பட 10 வேங்கைகள் வீரகாவியமான 13 ஆம் வருட நினைவு தினமான கடந்த 16ஆம் திகதி இந்த முன்பள்ளி திறக்கப்பட்டது.

முன்பள்ளி பெயர்ப் பலகையினை 'டெனிஸ்' அகதிகள் பேரவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் வைகுந்தன் திரை நீக்கம் செய்துவைத்தார். பிரதான வாயிலை பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழரசன் நாடாவெட்டித் திறந்துவைத்தார். நிகழ்வில் முல்லை.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செம்மணன் சிறப்புரையாற்றினார். (த-341)

## தென்னங்கன்றுகளில் வண்டுத்தாக்கம்; கட்டுப்படுத்த இயற்கை வழிமுறை!

தென்னங்கன்றுகளைக் கருவண்டு, செவ்வண்டுத் தாக்கங்களிலிருந்து பாதுகாப்பதற்கு இயற்கையான முறைகளைப் பின்பற்றுமாறு தெங்குப் பயிர்ச்செய்கையாளர்களிடம் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அறிவித்திருக்கிறது.

சமீபகாலமாக தென்னங்கன்றுகளில் வண்டுகளின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகிறது. இத்தகைய பாதிப்பிலிருந்து பயிர்களைப் பாதுகாப்பதற்கு, தென்னம் பிள்ளைகளுக்கு அருகில் கற்பூரவள்ளிச் செடியை நட்டுவைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கற்பூரவள்ளிச் செடி வளர்ந்துவரும் போது அதன் வாசம் தென்னங்குருத்தின் வாசத்தை விட அதிகமாக இருப்பதால் வண்டுகள் தென்னையிலிருந்து விடுபட்டு கற்பூரவள்ளி செடியை நாடிச் சென்றுவிடும். இதன் மூலம்தென் னங்கன்றுகள் பாதுகாக்கப்படும் என்று பொருண்மிய நிறுவனம் அறிவித்துள்ளது. (த-352)

## ஒட்டுசுட்டானில் பரவலாக சுகாதாரக் கருத்தரங்குகள்

ஒட்டுசுட்டான்,ஜன.24

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கற்சிலைமடு தியாகதீபம் திலீபன் மருத்துவ மனையினரால் சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன. சிறப்பு மருத்துவ நிபுணர் ஈழவாணியுடன் முதலுதவிப் பிரிவு அணியினரும் இணைந்து இந்தக் கருத்தரங்குகளை நடத்தி வருகின்றனர்.

(த-341)

## கணேசபுரம் - திருநகர் இணைப்பு வீதி மோசம்

கிளிநொச்சி,ஜன.24

கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையின் பின்புறமாக உள்ள கணேசபுரம் - திருநகர் இணைப்பு வீதியான அணைக்கட்டு வீதி முற்றிலும் மோசமான நிலையில் சேதமடைந்துள்ளது.

இவ்வீதியானது சுமார் 3 கிலோமீற்றர் தூரத்திற்கு பாதிக்கப்பட்டுள்ளது. இரு கழிவு வாய்க்கால்கள் வீதியைக் குறுக்கறுத்தும் செல் கின்றன. இரு புறமும் நெருங்கி பற்றைகள் வளர்ந்துள்ளன.

பாடசாலை மாணவர்கள், அலுவலர்கள், மக்கள் இவ்வீதியால் அச்சத்துடன் பயணிக்க வேண்டி உள்ளது. இந்த நிலை குறித்து பல தடவைகள் உரிய தரப்பிற்குச் சுட்டிக் காட்டியும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று அப்பகுதி கிராம அபிவிருத்திச் சங்கத்தினரும் மக்களும் தெரிவித்தனர்.

(த-301)

## சிறப்புற நடைபெற்ற மாணவர் வரவேற்பு

பரந்தன்,ஜன.24

துணுக்காய் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் தரம் ஒன்று மாணவர்களை வரவேற்கும் நிகழ்வுகள் கடந்த வியாழக் கிழமை சிறப்புற நடைபெற்றன. (த-352)

***

கற்சிலைமடு அ.த.க.பாடசாலையில் தரம் I மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு கடந்த 19ஆம் திகதி ஆசிரியை உ.கந்தமலர் தலைமையில் நடைபெற்றது.

புதிதாக வருகை தந்த தரம் I மாணவர்கள் மாலை அணிவித்து அழைத்துச் செல்லப்பட்டனர். ஆசியுரையினைப் பிரதம விருந்தினரான சங்கீத பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி அற்புதராசா வழங்கினார். கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

(த-341)

## வட்டக்கச்சிப் பொதுச் சந்தையில் துர்நாற்றம், சுகாதாரச் சீர்கேடு

வட்டக்கச்சி பொதுச்சந்தையில் நீண்ட நாள்களாகக் கழிவுப் பொருள்கள் அகற்றப்படாமையால் அங்கு பெரும் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டிருக்கிறது.

அங்குள்ள மீன், இறைச்சி விற்பனை நிலையங்களுக்கு சமீபமாக குப்பைகளும் பழுதடைந்த பழங்களும் குவிக்கப்பட் டுள்ளன.

இதனால் அங்கு துர்நாற்றம் வீசுவதுடன் தொற்று நோய்கள் பரவக்கூடிய அபாயமும் ஏற்பட்டிருக்கின்றது என்று சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. (த-352)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

பிறப்பு 20 - 07 - 1942



இறப்பு 25 - 12 - 2005

2005.12.25 ஞாயிறு அன்று சிவபதமடைந்த எமது இல்லத்தாய்

திருமதி பொன்னம்பலம் பூரணம்

(மனோன்மணி)

அவர்களின் அந்தியேட்டி சபிண்டீகரண கிரியைகள் இன்று (24.01.2006) செவ்வாய்க்கிழமை அதிகாலை 4 மணிக்கும் அதனைத் தொடர்ந்து மதியம் இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும்அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ்/கரணவாய் மகாவித்தியாலய வீதி,
கரணவாய் தெற்கு.
(கல்லுவம் கரணவாய் மேற்கு).(45935)(42-11-17)

அ.பொன்னம்பலம் (கணவர்)
பிள்ளைகள்: பொ.குகதாஸ் (J.P)
ம.லதா (சுவீடன்)

## வேலணைப் பிரதேச செயலகத்தில் நாளைமுதல் பிறப்பு, இறப்பு பதிவுகள்

யாழ்ப்பாணம்,ஜன.24

வேலணைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 4 பதிவாளர் பிரிவுகளுக்குமான இறப்பு, பிறப்பு, விவாகப் பதிவுகளுக்கான பதிவுக் கடமைகள் இன்று முதல் பிரதேச செயலகத்திற்கு மாற்றப்பட்டுள்ளன. இதுவரை காலமும் நயினாதீவு, புங்குடுதீவு, வேலணை, அல்லைப்பிட்டி ஆகிய பதிவாளர் பிரிவுகளுக்கான சகல பதிவு வேலைகளும் யாழ்.செயலக பதிவுத் திணைக்களத்திலேயே மேற்கொள்ளப்பட்டு வந்தன. இப்பொறுப்புகள் யாவும் இன்று செவ்வாய்க்கிழமை யாழ். செயலகத்திலிருந்து வேலணை பிரதேச செயலகத்திற்குக் கையளிக்கப்படுகின்றது.

நாளை புதன்கிழமை தொடக்கம் மேற்படி பிரிவுகளுக்குட்பட்ட மக்கள் பிரதேச செயலகத்திலேயே தமது பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகளை மேற்கொள்ளமுடியும் என்றும் -

காணி மேலதிக மாவட்டப் பதிவாளர் ப. பிரபாகர் தெரிவித்தார்.

இதேவேளை -

இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் மேற்படி பிரிவுகளுக்குட்பட்டவர்களின் பதிவு விண்ணப்பங்கள் எவையும் யாழ்.செயலக பதிவுத் திணைக்களத்தால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(எ-202-203)

PATRICIAN INSTITUTES
VACANCY
POST OF COMPUTER INSTRUCTOR

மேற்படி பதவிக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியானவர்கள் உரிய ஆவணங்களுடன் 27.01.2006ஆம் திகதிக்கு முன் நேரில் சமுகம் தரவும்.

மேலதிக விவரங்களுக்கு:

பதிவாளர்,
பற்றிஷியன் தொழிற்பயிற்சி நிறுவனம்,
59, ST.Patrick's Rd.,
Jaffna. (சி 47483)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருகோணமலை சிவன் ஆலயத்தில் இடிந்து விழ்ந்த தேர் தரிப்பிடக் கட்டடத்தின் இடிபாடுகள் அகற்றப்படு[illegible]தையும் ஏராளமானோர் குழுமி நின்று அதனைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். (ஐ)

# படுகொலைகளைத் தடுத்து நிறுத்துங்கள்!

## ஜனாதிபதிக்கு கஜேந்திரன் எம்.பி. அவசர கடிதம்

யாழ்ப்பாணம்,ஜன.24

சமாதான காலத்தில் படையினராலும் துணைப்படைகளாலும் மேற்கொள்ளப்படும் படுகொலைகளைத் தடுத்துநிறுத்த உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

- இவ்வாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் கேட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த இரு மாதங்களாக வடக்கு - கிழக்குப் பகுதிகளிலும் தென்னிலங்கையிலும் தமிழ் மக்களுக்கெதிரான கைதுகள், சித்திரவதைகள், பாலியல் துஷ்பிரயோகங்கள், பாலியல் வல்லுறவுகள் மற்றும் ஆள்கடத்தல், கொலைகள் என்பன அதிகரிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலைமைகள் தொடர்பாக எமது கட்சி பல தடவைகள் தங்களை நேரில் சந்தித்து நிலைமைகளைத் தெளிவுபடுத்தியதுடன், படையினரால் மேற்கொள்ளப்படும் வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதோடு - மக்கள் குடியிருப்புகளிலிருந்து படையினரை விலக்கி இயல்பு வாழ்வை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தோம்.

அத்துடன், அந்த நடவடிக்கைகளைத் துரிதமாக்கக் கோரி கடந்த 17, 18, 19ஆம் திகதிகளில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நாடாளுமன்றத்திற்குள்ளும் நடத்தினோம். எனினும், வழமை நிலை ஏற்படவில்லை.

இதற்கிடையில் கடந்த 18ஆம் திகதி தங்களைச் சந்தித்துக் கலந்துரையாடிய தினத்திலிருந்து ஒரு நாளைக்கு குறைந்தது ஒருவராவது படையினராலும் அவர்களுடன் சேர்ந்தியங்கும் துணை ஆயுதக் குழுவினரான ஈ.பி.டி.பியினராலும் படுகொலை செய்யப்படுகின்றனர்.

கடந்த சனிக்கிழமை மட்டும் குடாநாட்டில் மூன்று பேர் ஸ்ரீலங்கா புலனாய்வுத்துறையினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

படையினரின் இவ்வாறான கொலைகளால் மக்கள் மரண பயத்தில் யாழ். குடாநாட்டைவிட்டு வெளியேறும் நிலை அதிகரித்து வருகிறது.

இதனால், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினராகிய நாம் நாடாளுமன்றிற்கு உள்ளேயும் வெளியேயும் தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட வேண்டிய சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளோம்.

சமாதானப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு ஆர்வமாக இருப்பதாகத் தாங்கள் கூறிவருகின்றீர்கள். அதில் முன்னேற்றம் காணவேண்டுமாயின் முதலில் படுகொலைகளைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுங்கள் - என்று கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-6)

## கே.கே.சுப்பிரமணியத்துக்கு திருவாவடுதுறை ஆதீனம் விருது வழங்கும்

யாழ்ப்பாணம்,ஜன.24

காரைநகரைச் சேர்ந்த பிரபல சமய, சமூக சேவையாளர் கே.கே.சுப்பிரமணியத்துக்கு தமிழ்நாடு திருவாவடுதுறை ஆதீனம் விருது வழங்கிக் கௌரவிக்கவுள்ளது.

இந்தக் கௌரவிப்பு விழா எதிர்வரும் 3ஆம் திகதி திருவாவடுதுறை ஆதீனத்தில் நடைபெறும்.

திருவாவடுதுறை ஆதீனத்தின் குருமுதல்வர் நமசிவாயதேசிகரின் குருபூசை தினத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விழாவிலேயே கே.கே.சுப்பிரமணியத்துக்கு விருது வழங்க ஏற்பாடாகி உள்ளது. (எ)

## அந்தணரல்லாத இந்துக் குருமாருக்கு மார்ச் மாதம் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜன.24

சமய விவகார அமைச்சின் கீழ் இயங்கும் இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் அந்தணரல்லாத இந்துக் குருமார்களுக்கான பயிற்சி நெறியினை நடத்தவுள்ளது.

இந்தப் பயிற்சிநெறி எதிர்வரும் மார்ச் மாதம் 3ஆம் திகதி தொடக்கம் 16ஆம் திகதிவரை கதிர்காமம் இந்து யாத்திரிகர் விடுதியில் இடம்பெறும்.

இதில் கலந்துகொள்ள விரும்பும் அந்தணரல்லாத இந்துக்குருமார்கள் தமது சொந்த முகவரி எழுதிய தபால் உறையினை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் 'பணிப்பாளர், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 2481/1, காலி வீதி, கொழும்பு - 04' என்ற முகவரிக்கு அனுப்பிவைத்து விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்று இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் தெரிவித்தார். (ஐ-204)

## மீண்டும் இந்தியாவுக்கு அகதிகள்; ஐ.நா. தூதரகம் ஆழ்ந்த கவலை

இலங்கையிலிருந்து மீண்டும் அகதிகள் இந்தியாவிற்குச் செல்ல ஆரம்பித்திருப்பது குறித்து அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் தூதரகம் ஆழ்ந்த கவலையை வெளியிட்டிருக்கும் அதேவேளை, இலங்கையில் நிலவும் பாதுகாப்புச் சீர்குலைவே இந்த நிலைமைக்கான காரணமெனவும் சுட்டிக்காட்டியிருக்கிறது.

இதுதொடர்பில் கருத்து வெளியிட்டிருக்கும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தின் பேச்சாளர் வில்லியம் ஸ்பிண்ட்லர் -

2003ஆம் ஆண்டு ஜனவரிக்குப் பின்னர் முதன்முறையாக இப்போதே கூடுதலான அளவில் அகதிகள் இராமேஸ்வரத்திற்கு வருகின்றனர் எனவும் இலங்கையின் வடக்கு - கிழக்கில் ஏற்பட்டுள்ள பாதுகாப்புச் சீர்குலைவே இதற்குக் காரணமென்றும் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் இடம்பெறும் உள்ளக இடம்பெயர்வுகள் குறித்துக் கூடுதலான கவனஞ்செலுத்தப்பட்டு வருவதாகவும், தேவையாயின் புதிதாக இடம்பெயர்ந்தவர்களுக்கு மனிதநேய அடிப்படையிலான நிவாரண உதவிகளை வழங்கத் தாங்கள் தயாராகவே இருக்கிறார்கள் என்றும் - ஐ.நா. தூதரகப் பேச்சாளர் மேலும் கூறினார்.

முன்னதாக, போர்நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் பேணி, அமைதிப் பேச்சுகளை ஆரம்பிக்குமாறு ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கோபி அனான், இலங்கை அரசாங்கத்திடமும், விடுதலைப் புலிகளிடமும் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-க)

## மருத்துவ மாணவன் கைதானதை கண்டிக்கின்றது மாணவர் ஒன்றியம்

யாழ்ப்பாணம்,ஜன.24

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன் படையினரால் கைதுசெய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட சம்பவத்தை யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

கடந்த 20ஆம் திகதி கொக்குவில் பகுதியில் படையினரால் மருத்துவபீட மாணவன் ஒருவன் கைதுசெய்யப்பட்டு விடுவிக்கப்பட்டது தொடர்பாக யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் உள்ள பிரதேசங்களை சுற்றிவளைத்த இராணுவத்தினர் மக்களைக் கடுமையாக அச்சுறுத்தினர். கடுமையான சோதனை நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர்.

இந்தச் சுற்றிவளைப்பின்போது யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்தைச் சேர்ந்த 3ஆம் வருட மாணவன் அவரது இல்லத்திற்கு அருகில் வைத்து கைதுசெய்யப்பட்டார். அதன்பின்னர் இராணுவ முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டு கடுமையான விசாரணைக்குட்படுத்தப்பட்டார்.

துணைவேந்தரின் தலையீட்டையடுத்து அந்த மாணவன் விடுவிக்கப்பட்டார். இக்கைது நடவடிக்கையினை வன்மையாகக் கண்டிப்பதுடன் - இராணுவத்தினர் பல்கலைக்கழக மாணவர்களை அச்சுறுத்துவதற்காகவும் தொடர்ந்து குடாநாட்டில் பதட்டமான சூழலை அதிகரிப்பதற்குமான நடவடிக்கையாகவே நாம் இதனைக் கருதுகின்றோம் - என்றுள்ளது. (ஐ-7)

## கலாசார நிலையங்களை நிறுவும் பணி மீண்டும் ஆரம்பம்

கொழும்பு,ஜன.24

இதுவரை கலாசார நிலையங்கள் நிறுவப்படாத பிரதேச செயலர் பிரிவுகளில் வெகு விரைவில் கலாசார நிலையங்களை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கலாசார மற்றும் தேசிய மரபுரிமைகள் அமைச்சர் மஹிந்த யாப்ப அபயவர்த்தன இதனைத் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் மாத்தறையில் நடைபெற்ற கலாசார விழா ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கலாசார விழுமியங்களைப் பாதுகாக்கும் வகையில் இதுவரை 120 கலாசார நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நிதிப் பற்றாக்குறை காரணமாக இந்தத் திட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது. தற்போது இந்தத் திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன - என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (எ-13)



யாழ். நகர் மைய றோட்டறக்ட் கழகத்தினரால் திருநெல்[illegible] சங்க வளாகம் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது. கழக அங்கத்தவர்கள் சிரமதானத்தில் ஈடுபட்டபோது எடுக்கப்பட்ட படம் இது. (ஐ-203)

## சுரேஷைப் பதவி விலகுமாறு நெருக்குகிறது இ.தொ.கா.!

கொழும்பு,ஜன.24

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷைப் பிரதியமைச்சர் பதவியிலிருந்து நீக்குமாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கையொன்றை விடுத்திருப்பதாக ஜனாதிபதி மாளிகை வட்டாரங்கள் நேற்றுமுன்தினம் தெரிவித்தன.

[illegible]மை ஜனாதிபதியுடன் இடம்பெற்ற சந்திப்பின்போது மேற்படி கோரிக்கை விடப்பட்டது. ஆனால், இதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உடன்பாட்டைத் தெரிவிக்கவில்லையெனவும் கூறப்படுகிறது.

இதேவேளை, தற்போது தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் கீழுள்ள தொண்டமான் மன்றத்தின் பொறுப்புகளை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் கீழ் கொண்டுவரவேண்டுமென இ.தொ.கா. விடுத்த வேண்டுகோளை ஜனாதிபதி கொள்கையளவில் ஏற்றுக்கொண்டிருக்கிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நிர்வாகசேவை போட்டிப் பரீட்சை
# முன்னோடி வினாப்பத்திரம்

**பொது உளச்சார்பு** **நேரம்: 1மணித்தியாலம்**

தொகுப்பு:த.தவசேகர், B.Sc., P.G.D.E., P.G.D.P.

எதிர்வரும் 28ஆம் திகதி நடைபெறுகின்ற இலங்கை நிர்வாகசேவை போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவோருக்கு உதவுமுகமாக இந்த முன்னோடி (மாதிரி) வினாப்பத்திரம் வெளியிடப்படுகிறது.

* முதலாம், இரண்டாம், மூன்றாம் வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை. ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான விடையைத் தெரிவு செய்து விடையின் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்.
* ராணி, திலகம், வசந்தி, இந்திரா, கமலம், ரூபராணி, விமலா எனும் பெயர்களைக் கொண்ட ஏழு ஆசிரியைகள் வட்டவடிவான ஒரு மேசையைச் சூழ அமர்ந்து பகலுணவு உட்கொள்கின்றனர்.
* ராணி, விமலாவின் வலது புறத்தே இரண்டாவதாக அமர்ந்துள்ளார்.
* திலகம் வசந்தியின் அருகிலன்றி, ரூபராணியின் அருகில் அமர்ந்துள்ளார்.
* வசந்தியின் அருகே அமர்ந்திருக்கும் கமலம் விமலாவின் வலது புறத்தே மூன்றாவதாக அமர்ந்துள்ளார்.
* இந்திரா, ராணிக்கும் விமலாவுக்கும் இடையே அமர்ந்துள்ளார்.

01. விமலாவின் இடதுபுறத்தே அவரது அருகில் அமர்ந்திருப்பவர் யார்?
 1) இந்திரா 2) ராணி 3) வசந்தி 4) திலகம்
02. திலகத்தின் இடதுபுறத்தே நான்காவதாக அமர்ந்திருப்பவர் யார்?
 1) ராணி 2) ரூபராணி 3) வசந்தி 4) கமலம்
03. ரூபராணியின் இரு புறத்திலும் அமர்ந்திருப்போர் யாவர்?
 1) கமலம், வசந்தி 2) திலகம், விமலா 3) திலகம், வசந்தி 4) ராணி, இந்திரா

நான்காம், ஐந்தாம், ஆறாம் வினாக்கள் ஏழு நண்பர்கள் ஓர் ஆசன வரிசையில் அமர்ந்திருப்பது தொடர்பான பின்வரும் விபரங்களை அடிப்படையாகக் கொண்டவை. ஒவ்வொரு வினாவிலும் சரியான விடையைத் தெரிவு செய்து அவ்விடையின் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்.

* சரன், பிரசாந்தின் இடது புறத்தே அமர்ந்துள்ளார்.
* ரவி, உதயணனுக்கும் விமலனுக்கும் இடையே அமர்ந்துள்ளார்.
* சலீம், சரனின் வலதுபுறத்தே இரண்டு ஆசனங்களுக்கு அப்பால் இறுதி ஆசனத்தில் அமர்ந்துள்ளார்.
* விமலன், சரனின் அருகே இடதுபுறத்தே அமர்ந்துள்ளார்.
* பிரசாந்த், சலீமின் இடதுபுறத்தே கமாலின் வலது புறத்தில் அமர்ந்துள்ளார்.

04. கமாலின் வலது புறத்தே அவருக்கு அருகில் அமர்ந்திருப்பவர் யார்?
 1) சலீம் 2) பிரசாந்த் 3) சரன் 4) ரவி
05. ரவியின் இடது புறத்தே அமர்ந்திருப்பவர் யார்?
 1) உதயணன் 2) ரவி 3) பிரசாந்த் 4) சரன்
06. சரனின் வலது புறத்தே அவருக்கு அருகில் அமர்ந்திருப்பவர் யார்?
 1) உதயணன் 2) விமலன் 3) பிரசாந்த் 4) கமால்

**7 தொடக்கம் 12 வரையிலான ஒவ்வொரு வினாவிலும் ஒவ்வொரு தொகுதிச் சொற்கள் தரப்பட்டுள்ளன. இச்சொற்களை யாதேனும் கோட்பாட்டின் படி மூன்று சொற்களைக் கொண்ட இரண்டு கூட்டங்களாக வகைப்படுத்தலாம். இச்சொற்களின் மிகச் சிறந்த கூட்டமாக்கலைக் காட்டும் விடையைத் தெரிவு செய்து அவ்விடையின் கீழ் கோடிடுக.**

07. 1. குமுறு 2. விசிறி 3. துருசு 4. சிவிறி 5. பிளிறி 6. முறுகு
 1) (1,4,5) (2,3,6) 2) (1,3,4) (2,5,6) 3) (1,3,6) (2,4,5) 4) (1,2,5) (3,4,6)
08. 1. சொல் 2. மகன் 3. பந்தி 4. தந்தை 5. பாட்டன் 6. பக்கம்
 1) (1,4,6) (2,3,5) 2) (1,3,6) (2,4,5) 3) (1,4,5) (2,3,6) 4) (1,2,5) (3,4,6)
09. 1. தாகம் 2. யாமம் 3. ஓமம் 4. காகம் 5. சுகம் 6. நாமம்
 1) (1,3,4) (2,5,6) 2) (1,4,6) (2,3,4) 3) (2,4,6) (1,3,5) 4) (1,4,5) (2,3,6)
10. 1. இரவி 2. தினகரன் 3. மதி 4. அம்புலி 5. சந்திரன் 6. அருணன்
 1) (1,2,6) (3,4,5) 2) (1,3,6) (2,4,5) 3) (1,2,4) (3,5,6) 4) (1,4,6) (2,3,5)
11. 1. தீக்கோழி 2. காகம் 3. கிவி 4. புறா 5. கழுகு 6. பென்குவின்
 1) (1,3,5) (2,4,6) 2) (1,3,6) (2,4,5) 3) (1,2,4,) (3,5,6) 4) (1,6,4) (2,3,5)
12. 1. புறுபுறுப்பு 2. விகடகவி 3. மங்களம் 4. சங்கமம் 5. தித்திப்பு 6.குத்துவிளக்கு
 1) (1,2,3) (4,5,6) 2) (1,2,5) (3,4,6) 3) (1,3,5) (2,4,6) 4) (1,2,6) (3,4,5)

**13 தொடக்கம் 18வரையிலான ஒவ்வொரு வினாவிற்குமுரிய சரியான விடையின் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்.**

2004 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 9 ஆந் திகதி தொடக்கம் 16 ஆந் திகதி வரையில் பட்டப்பின்படிப்பு கற்கைநெறிக்குரிய சில விரிவுரைகளை நடத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இக்காலப் பகுதியுள் கல்வி உளவியல், கல்விக் கோட்பாடுகள், ஒப்பீட்டுக்கல்வி, கல்வி அளவீடும் மதிப்பீடும், கலைதிட்ட அபிவிருத்தி, கற்பித்தல் முறைகள், கல்வித் தத்துவம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

* கற்கை நெறி கல்வி அளவீடும் மதிப்பீடும் எனும் பாடத்துடன் ஆரம்பிக்கப்படும்.
* பெப்ரவரி 15 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமையும் விடுமுறை தினமுமாகும்.
* கற்பித்தல் முறைகள் எனும் பாடம் கற்பிக்கப்படும் தினத்துக்கு முந்திய தினத்தில் ஒப்பீட்டுக்கல்வி எனும் பாடம் கற்பிக்கப்படும்.
* கல்வி உளவியல்பாடத்துடன் கற்கைநெறிமுற்றுப் பெறும்.
* கலைத்திட்ட அபிவிருத்தி எனும் பாடம், விடுமுறை தினத்துக்கு முந்திய தினத்தில் கற்பிக்கப்படும்.
* கல்விக் கோட்பாடுகள் எனும் பாடம் கற்பிக்கப்படும் தினத்துக்கும் கல்வித்தத்துவம் எனும் பாடம் கற்பிக்கப்படும் தினத்துக்கும் இடையே இரண்டு நாள் இடைவெளி உண்டு.

13. இக்கற்கை நெறியில் செவ்வாய்க்கிழமை கற்பிக்கப்படும் பாடம் எது?
 1) கல்வி உளவியல் 2) கற்பித்தல் முறைகள் 3) கல்வித்தத்துவம் 4) ஒப்பீட்டுக்கல்வி
14. இக்கற்கை நெறியில் ஆறாவது பாடமாகக் கற்பிக்கப்படும் பாடம் எது?
 1) ஒப்பீட்டுக்கல்வி 2) கலைத்திட்டஅபிவிருத்தி
 3) கற்பித்தல் முறைகள் 4) கல்விக்கோட்பாடுகள்
15. ஒப்பீட்டுக்கல்விப்பாடம் கற்பிக்கப்படும் தினத்துக்கும் கலைத் திட்ட அபிவிருத்திப் பாடம் கற்பிக்கப்படும் தினத்துக்கும் இடையே எத்தனை நாள் இடைவெளி உள்ளது?
 1) ஒருநாள் 2) இரண்டு நாள் 3) மூன்று நாள் 4) நான்கு நாள்
16. ஒப்பீட்டுக் கல்விப் பாடம் கற்பிக்கப்படும் தினத்துக்கு மறுநாள் கற்பிக்கப்படும் பாடம் [illegible]?
 1) கல்வி அளவீடும் மதிப்பீடும் 2) கல்வித்தத்துவம்
 3) கற்பித்தல் முறைகள் 4) கல்விக் கோட்பாடுகள்
17. பெப்ரவரி 11 ஆந் திகதி கற்பிக்கப்படும் பாடம் எது?
 1) கல்வித்தத்துவம் 2) ஒப்பீட்டுக்கல்வி
 3) கற்பித்தல் முறைகள் 4) கல்விக்கோட்பாடுகள்
18. 9 ஆந் திகதி திங்கட்கிழமையன்றும் 16 ஆந் திகதி திங்கட் கிழமையன்றும் கற்பிக்கப்படும் பாடங்கள் முறையே எவை?
 1) கல்வி அளவீடும் மதிப்பீடும், ஒப்பீட்டுக்கல்வி
 2) ஒப்பீட்டுக்கல்வி, கற்பித்தல் முறைகள்
 3) கல்வி அளவீடும் மதிப்பீடும், கல்வி உளவியல்
 4) கல்வித்தத்துவம், கலைத்திட்ட அபிவிருத்தி

**19 தொடக்கம் 21 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய சரியான விடையைக் கீழே தரப்பட்டுள்ள நான்கு விடைகளிலிருந்தும் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் விடையின்கீழ் கோடிடுக.**

19. ஒரு சிறிய கனவடிவப் பெட்டி உள்ளது. இச்சிறிய பெட்டியின் ஒரு பக்கத்தின் மூன்று மடங்கான பக்கமுள்ள வேறொரு பெட்டி உம்மிடம் இருப்பின், அப்பெட்டியினுள்ளே எத்தனை சிறிய பெட்டிகளை அடுக்கி வைக்கலாம்?
 1) 9 2) 16 3) 25 4) 27
20. ரவியிலும் பார்க்க 2 நாட்களுக்கு முன்னர் ராஜன் பிறந்தான். ரவி வெள்ளிக்கிழமை பிறந்த சேகரிலும் பார்க்க ஒரு நாளினால் இளையவன். ராஜன் பிறந்த நாள் யாது?
 1) செவ்வாய்க்கிழமை 2) புதன்கிழமை
 3) வியாழக்கிழமை 4) சனிக்கிழமை
21. ஒரு நாளில் தலா 27000 வீதம் தொலைபன்னிச் சிட்டைகளை அச்சிடுவதற்கு இரு கணணி அச்சிடும் பொறிகள் உள்ளன. ஓர் அச்சிடும் பொறி மணித்தியாலத்துக்கு 4500 வீதமும் மற்றைய அச்சிடும் பொறி மணித்தியாலத்துக்கு 4000 வீதமும் தொலைபன்னிச் சிட்டைகளை அச்சிடுகின்றன. முதலாவது அச்சிடும் பொறி ஒரு நாளில் குறித்த எண்ணிக்கையான சிட்டைகளை அச்சிட்டு முடிக்கும் போது இரண்டாம் அச்சிடும்பொறி மேலும் எத்தனை சிட்டைகளை அச்சிட வேண்டியிருக்கும்?
 1) 2000 2) 3000 3) 3500 4) 4500

**22 தொடக்கம் 27 வரையிலான ஒவ்வொரு வினாவிற்குமுரிய சரியான விடையின் இலக்கத்தைப்புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்.**


ஆறு சொற்களுக்குரிய இரகசியக்குறியீடுகள் பின்வருமாறு
 1. LTRND 2) XMXED 3) XHGFE 4) XEDBA 5) XPDSD 6) LTRVA

இவ் இரகசியக்குறியீடுகள் ஒவ்வொன்றையும் பொருத்தமான சொற்களுடன் தொடர்புபடுத்துக


22 மரகதம் ( )
23. கங்கணம் ( )
24. கதம்பம் ( )
25. மதிப்பீடு ( )
26. கணிப்பீடு ( )
27. தத்துவம் ( )

**28 தொடக்கம் 32 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் எண்களின் கோலத்தை விளங்கிகொண்டு வெற்றிடத்தில் வரவேண்டிய எண்ணைத் தெரிக.**


28) 0.1 0.11 0.19 0.46 1.1 2.35 -------
 (1) 2.51 (2) 4.51 (3) 3.51 (4) சரியாகக் கூறமுடியாது.
29. T - 7, P - 11, L - 15, D - 23, B ---------
 **1) 2 2) 23 3) 16 4) 25**

30)


 (1) 15 (2) 3 (3) 51 (4) 5


31)


 (1) 322 (2) 313 (3) 530 (4) 511

32)



 (1) 84 (2) 63.5 (3) 26 (4) 83

**33 தொடக்கம் 35 வரையான வினாக்கள் கீழே தரப்பட்ட உருவை அடிப்படையாகக் கொண்டவை.உருவில் எண்கூள் ஏதோவொரு கோலத்திற்கேற்ப அமைந்துள்ளது.**




33) A இல் வரவேண்டிய எண்.
 (1) 6 (2) 11 (3) 14 (4) 10
34) B இல் வரவேண்டிய எண்
 (1) 55 (2) 200 (3) 220 (4) 525
35) C இல் வரவேண்டிய எண்.
 (1) 225 (2) 425 (3) 625 (4) 825

* 36 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் இருக்கும் நெய்யரியில் 1,2,3,4,5 என்றவாறு ஐந்து உருக்களும் A,B,C,D,E என்றவாறு ஐந்து உருக்களும் உள்ளன. அவை ஒவ்வொன்றையும் ஒன்றன் மீதொன்று வைத்து ஆக்கப்படும் கூட்டு உருவங்கள் $A_1, A_2$, — $B_1, B_2$, —— என்றவாறு பெயரிடப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா இலக்கத்துக்கும் எதிரே இருக்கும் ஐந்து அடைப்புகளினுள்ளேயும் அமைக்கப்பட்டுள்ள கூட்டு உருவங்களில் ஒன்று பிழையானது. அதனைத் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

36) 37) 38) 39) 40)


(......)
(......)
(......)
(......)
(......)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


41 தொடக்கம் 45 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றும் உருவில் காணப்படும் 16 சதுரங்களைக்கொண்ட நெய்யரியை அடிப்படை யாய்க் கொண்டவை. ஒரு சதுரத்திலிருந்து வேறொரு சதுரத்திற்குச் செல்லும் படிமுறையானது,செல்லும்திசை,சதுரங்களின் எண்ணிக்கை ஆகியவற்றின் மூலம் சதுரத்தினுள்ளே காட்டப்பட்டுள்ளது.

உதாரணமாக

| |
|---|
| கி - 2 |
| தெ - 1 |

என்பது கிழக்கு நோக்கி இரு சதுரங்களுக்கும் தெற்கு நோக்கி ஒரு சதுரத்துக்கும் செல்ல வேண்டும் என்பதனைக் குறிப்பிடுகின்றது. இதற்கேற்ப ஒவ்வொரு வினாவுக்கும் உரிய சரியான விடையை (சதுரத்தின் எண்ணை)ப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| 1<br>கி - 2<br>தெ - 1 | 2<br>கி - 2<br>தெ - 3 | 3 <br>கோவில | 4<br>தெ - 1<br>மே - 3 |
| 5<br>கி - 3<br>தெ - 1 | 6<br>கி - 1<br>வ - 1 | 7<br>மே - 2<br>தெ - 2 | 8<br>மே - 3<br>வ - 1 |
| 9<br>கி - 1<br>வ - 1 | 10<br>வ - 2<br>கி - 2 | 11 <br>வீடு | 12<br>மே - 2<br>தெ - 1 |
| 13<br>வ - 3<br>கி - 2 | 14<br>மே - 1 | 15 <br>வங்கி | 16<br>மே - 1<br>வ - 1 |




41. சதுரம் 1 இலிருந்து இரண்டு படிமுறைகளின் பின்னர் அடையப்படும் சதுரம் யாது? ( )
42. சதுரம் 4 இலிருந்து மூன்று படிமுறைகளின் பின்னர் அடையப்படும் சதுரம் யாது? ( )
43. இரண்டு படிமுறைகளின் பின்னர் வீட்டை அடைவதற்கு ஒருவர் எந்தச் சதுரத்திலிருந்து பயணத்தை ஆரம்பிக்க வேண்டும்? ( )
44. நான்கு படிமுறைகளின் பின்னர் கோவிலை அடைவதற்கு ஒருவர் எந்தச் சதுரத்திலிருந்து பயணத்தை ஆரம்பிக்க வேண்டும்? ( )
45. வங்கியை அடுத்து மேற்கே இருக்கும் சதுரத்தை இரண்டு படிமுறைகளின் பின்னர் அடைவதற்கு ஒருவர் எந்தச் சதுரத்திலிருந்து பயணத்தை ஆரம்பிக்க வேண்டும்? ( )

**46 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றும் வங்கி ஒன்றின் எட்டு மாடிக் கட்டடத்தை அடிப்படையாய்க் கொண்டவை.**

- அக்கட்டடத்தில் பணிப்பாளர் சபை, தவிசாளர், பிரதித் தவிசாளர், முகாமைப் பணிப்பாளர், நிதிப் பணிப்பாளர், சேமிப்பு முகாமையாளர், முதலீட்டு முகாமையாளர் என்ற அலுவலர்களின் அலுவலகங்கள் உள்ளன. ஒரு மாடியில் களஞ்சியம் உள்ளது.
- பணிப்பாளர் சபையினதும் தவிசாளரினதும் அலுவலகங்கள் இருக்கும் மாடிகளுக்கிடையே உள்ள மாடிகளின் எண்ணிக்கையும் பிரதித தவிசாளரினதும் முகாமைப் பணிப்பாளரினதும் அலுவலகங்கள் இருக்கும் மாடிகளுக்கிடையே உள்ள மாடிகளின் எண்ணிக்கையும் சமம்.
- நிதிப் பணிப்பாளர் அலுவலகமும் சேமிப்பு முகாமையாளரின் அலுவலகமும் அடுத்த டுத்தமாடிகளில் உள்ளன.
- முதலீட்டு முகாமையாளரின் அலுவலகம் நிதிப் பணிப்பாளரின் அலுவலகத்துக்குக் கீழே இருக்கும் ஒரு மாடியில் உள்ளது.
- முதலாம் மாடியில் (அதாவது தரைத்தளத்தில்) களஞ்சியம் இருப்பதில்லை.
- ஒவ்வொரு வினாவுக்கும் உரிய சரியான விடையைக் கீழே தரப்பட்டுள்ள நான்கு விடைகளிலிருந்தும் தெரிந்தெடுத்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

**46. மிகக் கீழேயுள்ள (முதலாம்) மாடியிலிருந்து மிக மேலே உள்ள மாடி வரைக்கும் அலுவலகங்கள் இருக்கும் ஒழுங்கு யாது?**
1. முதலீட்டு முகாமையாளர், பணிப்பாளர் சபை, பிரதித் தவிசாளர், தவிசாளர், முகாமைப் பணிப்பாளர், நிதிப் பணிப்பாளர், சேமிப்பு முகாமையாளர், களஞ்சியம்
2. முதலீட்டு முகாமையாளர், பணிப்பாளர் சபை, நிதிப் பணிப்பாளர், களஞ்சியம், சேமிப்பு முகாமையாளர், தவிசாளர், பிரதித் தவிசாளர், முகாமைப் பணிப்பாளர்.
3. முதலீட்டு முகாமையாளர், தவிசாளர், பணிப்பாளர் சபை, சேமிப்பு முகாமையாளர், நிதிப் பணிப்பாளர், முகாமைப் பணிப்பாளர், பிரதித் தவிசாளர், களஞ்சியம்
4. பணிப்பாளர் சபை, தவிசாளர், பிரதித் தவிசாளர், முதலீட்டு முகாமையாளர், களஞ்சியம், முகாமைப் பணிப்பாளர்,நிதிப் பணிப்பாளர்,சேமிப்பு முகாமையாளர். ( )

47. சேமிப்பு முகாமையாளரின் அலுவலகம் 2ஆம் மாடியில் இருக்குமெனின், பின்வரு வனவற்றில் எது கட்டாயம் உண்மையாக இருக்க வேண்டும்?
1. மிக மேலே உள்ள மாடியில் களஞ்சியம் இருக்கின்றது.
2. நிதிப் பணிப்பாளர் மிகக் கீழே உள்ள மாடியில் இருக்கின்றார்.
3. முதலீட்டு முகாமையாளர் மிகக் கீழே உள்ள மாடியில் இருக்கின்றார்.
4. தவிசாளர் மிக மேலே உள்ள மாடியில் இருக்கின்றார். ( )

48. பணிப்பாளர் சபை 6 ஆம் மாடியில் இருப்பதுடன் தவிசாளர் 7 ஆம் மாடியிலும் சேமிப்பு முகாமையாளர் 4 ஆம் மாடியிலும் இருப்பார்களெனின், பின்வருவனவற்றில் எவை உண்மையானவை?
A – பிரதித் தவிசாளர் முதலாம் மாடியில் இருக்கின்றார்.
B – நிதிப் பணிப்பாளர் 5 ஆம் மாடியில் இருக்கின்றார்.
C – முகாமைப் பணிப்பாளர் 2ஆம் மாடியில் இருக்கின்றார்
D – களஞ்சியம் 8 ஆம் மாடியில் இருக்கின்றது.
1) A, B ஆகியன மாத்திரம் 2) A, B, C ஆகியன மாத்திரம்
3) B, C ஆகியன மாத்திரம் 4) B, C, D ஆகியன மாத்திரம் ( )

49. பணிப்பாளர் சபை 2ஆம் மாடியில் இருப்பதுடன் தவிசாளர் 4 ஆம் மாடியிலும் இருப்பா ரெனின், பின்வருவனவற்றில் ஒன்றைத் தவிர எல்லாம் உண்மையானவை. பொய்யானது யாது?
1. பிரதித் தவிசாளர் 6 ஆம் மாடியில் இருக்கின்றார்.
2. முகாமைப் பணிப்பாளர் 3ஆம் மாடியில் இருக்கின்றார்.
3. சேமிப்பு முகாமையாளர் 7ஆம் மாடியில் இருக்கின்றார்.
4. முதலீட்டு முகாமையாளர் முதலாம் மாடியில் (தரைத் தளத்தில்) இருக்கின்றார். ( )

50. பணிப்பாளர் சபை முதலாம் மாடியில் இருப்பதுடன் தவிசாளர் 5 ஆம் மாடியிலும் பிரதித் தவிசாளர் 2ஆம் மாடியிலும் இருப்பார்களெனின், முதலீட்டு முகாமையாளரின் அலுவலகம் இருக்க வேண்டிய மாடி யாது?
1) 3 ஆம் மாடி 2) 4 ஆம் மாடி
3) 8 ஆம் மாடி 4) 3ஆம் அல்லது 4ஆம் மாடி ( )

# இலங்கை நிர்வாகசேவை போட்டிப் பரீட்சை
## முன்னோடி வினாப்பத்திரம்

**பொது அறிவு** **நேரம்: 2மணித்தியாலம்**

தொகுப்பு:த.தவசேகர், B.Sc., P.G.D.E., P.G.D.P.

01. இலங்கையின் மிக உயரமான மலைச் சிகரம்.
1) சிவனொளிபாத மலை 2) நமுனகுலகந்தை மலை
3) பீதுருதாலகால மலை 4) பத்தலேகல மலை
02. ஏறத்தாழ இலங்கையின் சனத்தொகைக்குச் சமமான சனத்தொகையைக் கொண்ட நாடு.
1) மியன்மார் 2) நியூஸிலாந்து 3) நேபாளம் 4) ஆஸ்திரேலியா
03. இலங்கையின் தேசிய கீதத்தினை நிர்மாணித்தவர்.
1) கலாநிதி பண்டிதர் அமரதேவ
2) சுனில்சாந்த அவர்கள்
3) ஆனந்த சமரக்கோன் அவர்கள்
4) அரிசென் அகுபது அவர்கள்
04. இலங்கையில் மனித உரிமைகள் மீறல் தொடர்பான தீர்ப்பினை வழங்கும் நீதிமன்றம்.
1) நீதவான் நீதிமன்றம் 2) மேல் நீதிமன்றம்
3) மேன்முறையீட்டு நீதிமன்றம் 4) உயர் நீதிமன்றம்
05. இன்று பழம்பொருளியல் (Classical Economic) எனக் கூறப்படும் சிந்தனையை விருத்தி செய்தவரில் முதன்மையானவர்.
1) அடம்ஸ்மித் 2) ஜோன் மேனாட் கெயின்ஸ்
3) கார்ல்மார்க்ஸ் 4) ஜோன் கென்னத் கலிபெரத்
06. இலங்கைக்கு சர்வஜன வாக்குரிமை கிடைத்த வருடம்.
1) 1833 2) 1927 3) 1931 4) 1948
07. இலங்கையில் பாராளுமன்றத் தேர்தல் இரு தடவைகள் நடத்தப்பட்ட வருடம்
1) 1952 2) 1960 3) 1965 4) 1970
08. இலங்கையில் சுனாமியின் காரணமாக மிகக்குறைந்த தொகையினர் மரணித்ததாகப் பதிவு செய்யப்பட்ட மாவட்டம்.
1) களுத்துறை 2) கொழும்பு 3) கம்பஹா 4) புத்தளம்
09. சார்க் பிராந்திய நாடுகளில் அதிகளவு எழுத்தறிவு வீதத்தினையுடைய மக்களைக் கொண்டது.
1) இலங்கை 2) மாலைதீவுகள் 3) இந்தியா 4) பாகிஸ்தான்
10. ஞாயிற்றுத் தொகுதியிலுள்ள மிகப் பெரிய கோள்.
1) வியாழன் 2) சனி 3) சுக்கிரன் 4) செவ்வாய்
11. சுனாமி தொடர்பான அபாயத்தினை அறிவிப்பதற்காக இந்து சமுத்திரத்தில் நிலையம் ஒன்று அமைத்துக்கொள்வது தொடர்பில் சர்வதேச மாநாடென்று நடத்தப்பட்ட நாடும் அதன் நகரமும்.
1) இந்தோனேசியா - ஜகர்த்தா நகர் 2) பிலிபைன்ஸ் - மணிலா நகர்
3) தாய்லாந்து - பாங்கொக் நகர் 4) ஜப்பான் - கோயே நகர்
12. உலகின் மிகப் பெரிய ஜனநாயக அரசு அமைந்துள்ள நாடு.
1) அமெரிக்க ஜக்கிய நாடுகள் 2) இந்தியா
3) பெரியபிரித்தானியா 4) கனடா
13. இன்றைய ஜக்கிய அமெரிக்க அரசுகளின் இராஜாங்க செயலாளரான கொண்டலிசா றைஸ் என்பவர் இப்பதவிக்கு நியமிக்கப்பட்ட
1) முதலாவது பெண்மணியாவார்.
2) முதலாவது கறுப்பினப் பெண்மணியாவார்.
3) முதலாவது கறுப்பின அரச தூதுவர் ஆகும்.
4) முதலாவது கறுப்பின வைத்தியக் கலாநிதியாவார்
14. பின்வருவனவற்றுள் சமய வழிபாட்டிடம் அல்லாதது.
1) சாந்திநிகேதன் 2) வத்திக்கான்
3) அமிர்தகரஸ் 4) மெக்கா
15. ஐ.நா.சபையில் இன்று அங்கத்துவம் பெற்றுள்ள நாடுகளின் எண்ணிக்கை.
1) 161 2) 171 3) 181 4) 191
16. உலக கிரிக்கெட் வெற்றிக் கிண்ணத்தை இரு தடவைகள் வெற்றி கொண்ட நாடுகள் இரண்டு.
1) இந்தியா - பாகிஸ்தான் 2) நியூஸிலாந்து - ஆஸ்திரேலியா
3) ஆஸ்திரேலியா - மேற்கிந்தியத் தீவுகள் 4) இங்கிலாந்து - பாகிஸ்தான்
17. இலங்கையின் உத்தியோகபூர்வப் பெயர் யாது?
1) இலங்கை குடியரசு 2) இலங்கை சனநாயகக் குடியரசு
3) இலங்கை சோசலிசக் குடியரசு 4) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு
18. இலங்கையில் யானைகளின் சரணாலயம் எங்கு அமைந்துள்ளது?
1) யால 2) குமண 3) ஹக்கல 4) பின்னவல
19. இலங்கையின் மிகப் பெரிய நிர்வாக மாவட்டம்
1) அனுராதபுரம் 2) மட்டக்களப்பு 3) குருணாகல் 4) மொனறாகலை
20. துருக்கிய கிளர்ச்சிக் குழுவின் பெயர் யாது?
1) ஹமாஸ் 2) குர்திஷ் 3) பாஸ்க் 4) அபசயாவ்
21. பின்வருவனவற்றுள் குழு 7 (G – 7) இன் 8 ஆவது உறுப்பினராக வந்த நாடு எது?
1) ஜக்கியஅமெரிக்க அரசுகள் 2) ரஸ்யா
3) பிரான்ஸ் 4) பெரிய பிரித்தானியர்
22. 1999 ஆம் ஆண்டில் போர்த்துக்கேசரால் இந்தத் தீவு சீனாவிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் வாதத்தின் கடைசிச் சின்னமும் முடிவுற்றது. இத்தீவின் பெயர் யாது?
1) ஹொங்கொங் 2) மக்காவோ
3) நவறு 4) சுமாத்திரா
23. உலகம் முழுவதும் அகதிகளின் நலனைப் பாதுகாக்கும் ஜக்கிய நாடுகள் சபையின் முகவர்.
1) UNDRO 2) UNRWA 3) UNHCR 4) UNRISD
24. சீனச் செய்தி முகவர்நிலையத்தின் (Press agency) பெயர் யாது?
1) தனஜவுக் 2) சினிஹவுவா 3) AFP 4) PTI
25. கோளமயமாதல் (Globalization) நிகழ்வுடன் மனித குலத்துக்கு ஏற்பட்ட பயனுறுதிமிக்க நன்மை யாது?
1) எல்லா நாடுகளுடனும் நெருங்கிய தொடர்பு
2) பழைய அறிவுக்குப் பதிலாக புதிய அறிவு
3) சமூகங்கள் சமயச் சார்பற்றதாகுதல்
4) புதிய மனித இன நலக் கோட்பாடு (New Humanisum) பரவுதல்
26. ஒரு பில்லியன் என்பது
1) 10 மில்லியன் 2) 100 மில்லியன்
3) 1000 மில்லியன் 4) 10 000 மில்லியன்
27. ரிக்ரர் அளவிடை (Richter Seale) எதனை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படுகிறது?
1) கடலின் ஆழம் 2) மலைகளின் உயரம்
3) ஒளியின் வேகம் 4) பூகம்பத்தின் பருமன்
28. புத்தாக்கங்களுக்கும் புதிய கண்டுபிடிப்புகளுக்குமான வரலாற்றில் 20ஆம் நூற்றாண்டு மிகச் செழுமையான பகுதியாகும். பின்வருவனவற்றுள் எது வாழ்க்கை ரகசியங்களின் கண்டுபிடிப்பு என அழைக்கப்படக் கூடியது எது?
1) இதயமாற்று 2) முதல் சோதனைக் குழாய்க் குழந்தை
3) மனித முளையக் குளோனிங் 4) DNA கட்டமைப்பு
29. புதிய தொழினுட்பவியல்கள் தொடர்பாகப் பின்வரும் கூற்றுகளில் பிழையானது எது?
1) இணையம் (Internet) என்பது உலகம் பூராவும் தொலைபன்னிக் கம்பிகளின் ஊடாக இணைக்கப்பட்டிருக்கும் கணனிகளின் பரந்த வலையமைப்பாகும்.
2) மொடொம் (Modem) என்பது கணனியை தொலைபன்னித் தொகுதியுடன் இணைத்து தகவல்களைப் பெறவும் அனுப்பவும் அனுமதிக்கும் ஒரு கருவியாகும்.
3) புவி ஈர்ப்பின் இழுப்பிலிருந்து தப்பிக் கொள்வதற்கு ஒரு விண்வெளிக்கலம் 20000 கிலோ மீற்றருக்கு km/h மேலாகச் செல்ல வேண்டும்.
4) செய்மதிகள் தொடர்பாடலுக்கும் விஞ்ஞான ஆய்வுகளுக்கும் வானிலை தரவுகளைச் சேகரிப்பதற்கும் யுத்தத் தகவல்களைச் சேகரிப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது.
30. உதைபந்தாட்ட (Soccer) விளையாட்டுக்கு மிகவும் புகழ்பெற்ற இடம்.
1) நேபாளம் 2) சுவிற்ஸர்லாந்து
3) ஜக்கிய அமெரிக்க அரசுகள் 4) ஆர்ஜென்ரீனா

(பொது அறிவு வினாப்பத்திரத்தின் எஞ்சிய பகுதி நாளைய உதயனில் வெளியாகும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# உபநயன பிரம்மோபதேச அழைப்பு

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் பார்த்திப வருஷம் தைத்திங்கள் 12 ஆம் நாள் (25.01.2006) புதன்கிழமை தசமித் திதியும், அனுஷ நட்சத்திரமும், மகர லக்னமும் கூடிய காலை 7 மணி 06 நிமிஷம் முதல் 8 மணி 18 நிமிஷம் வரையிலான சுபமுகூர்த்தத்தில்

அச்செழு
பிரம்மஸ்ரீ சு.சிதம்பரேஸ்வர சர்மா
அவர்களின் பௌத்திரனும்

புன்னாலைக்கட்டுவன்
பிரம்மஸ்ரீ சோ.பாலகிருஷ்ண சர்மா
அவர்களின் தௌஹித்திரனும்

ஆகிய எமது புத்திரன் ஸ்ரீவத்ச கோத்திரம்

**சிரஞ்ஜீவி கி.பிரணவன்**

அவர்கட்கு

சௌள உபநயன பிரம்மோபதேசம் செய்ய விநாயகர், அம்பாள் துணையுடனும் பெரியோர் நல்லாசியுடனும் நிச்சயித்திருப்பதால் தாங்கள் தங்கள் பந்துமித்திர குடும்ப சமேதராக வருகைதந்து உபநீதனை ஆசீர்வதித்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரதமகுரு
குப்பிளான் சோதிவிநாயகர் ஆலயம்,
குப்பிளான் கன்னிமாகௌரி அம்பாள் ஆலயம்,
அச்செழு விநாயகர்/ அம்பாள் ஆலயம்,
சிறுப்பிட்டி ஞானவைரவர் ஆலயம்.

சிவஸ்ரீ சி.கிருஷ்ணசாமி குருக்கள்,
திருமதி கிருத்திகா தம்பதிகள்,
ஐயனார் கோயிலடி,
புன்னாலைக் கட்டுவன் வடக்கு,
சுன்னாகம்.

(45856) (39)



# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

நிகழும் பார்த்திப வருடம்
மார்கழித்திங்கள் 10 ஆம் நாள்
(26.12.2005) திங்கட்கிழமை பின் இரவு
தசமி திதியில் சிவபதமடைந்த எமது
குடும்பத்தலைவி

**திருமதி**
**பஞ்சரத்தினம்**
**நிர்மலராணி**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று(24.01.2006) செவ்வாய்க் கிழமை முற்பகல் 11 மணியளவில் மஞ்சவனப்பதி வீதி இல்லத்தில் நடைபெறும். இந் நிகழ்வில் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து இந்த ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பிறப்பிடம்: மணியகாரன் வீதி, தெல்லிப்பழை கிழக்கு.
வசிப்பிடம்: 366, கச்சேரி -நல்லூர் வீதி, நல்லூர்.
மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில் மேற்கு.

**குடும்பத்தினர்.**
(45901)

# சவேரியார் ஆலய வருடாந்தத் திருவிழா

சங்கானை, ஜன.24

சங்கானை புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலய வருடாந்த திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

ஆலய பங்குத்தந்தை யூட் நிக்ஷன் திருவிழாவை கொடியேற்றி ஆரம்பித்து வைத்தார்

இன்று செவ்வாய்கிழமை காலை 7 மணிக்கு நற்கருணை ஆராதனை இடம் பெறும். அத்துடன் இந்நிகழ்வில் யாழ். ஆயரின் 25 வருட ஆயர் பணியை கௌரவித்து அவரை வரவேற்கும் நிகழ்வும் இடம் பெறவுள்ளது.

(ஐ-29-203)

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



## செல்வி ஹம்சிதா

ஜேர்மனியில் வசிக்கும் பாலரூபன்-கார்த்திகா தம்பதியினரின் செல்வப் புதல்வி ஹம்சிதா தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (24.01.2006) செவ்வாய்க்கிழமை வவுனியா, வாரிக்குட்டி ஊரிலுள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, துளசிச் சித்தி, கிருபன் மாமா, சுதா அத்தை (லண்டன்), சிவா மாமா, வவா அத்தை, குகன் சித்தப்பா, கோப்பாயில் வசிக்கும் அம்மப்பாமார், அம்மம்மாமார், மாமாமார், அண்ணா அபிறதன் (லண்டன்) மற்றும் மச்சான்மார்களான திலக்ஷிகன், பானுஷியன் ஆகியோர் பாண்டியன் தாழ்வு நரசிம்ம வைரவப் பெருமான் அருளினால் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

(45896)

495, 4ம் யூனிற்,
வாரிக்குட்டியூர், வவுனியா.

தகவல்: கா. திருநீலகண்டன் (அப்பப்பா)
தொ.பே.: 222 7269

# 31 ஆவது நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில் 26.10.1993
மண்ணின் மடியில் 26.12.2005

**மறைந்து விட்ட உனக்கு மறையாத நினைவுகளாக...**

சின்ன மகளே! எம் சித்திரமே!
சிரித்த முகத்துடன்
சித்தப்பா என்றவளே- நிலவாய்
எம் இதயத்தில் நிலவிய மலரே!
நிலவேனும் தேய்ந்து தான்
மறையுமம்மா -நீயோ
அரைநொடியில் மறைந்து விட்டாய்
பிரியனி என்ற பெயரை வைத்துப்
பிரியா என்றழைத்தது- நீ
எம்மை விட்டுப் பிரியத்தானா?
பல வருடம் கழித்து வந்தோம்
பாசமாகச் சில நாள்கள் பழகினோம்
பைங்கிளியே உனை நிரந்தரமாய்
இழந்திடவா?
பழகாமல் விட்டிருந்தால்- எம்
வருத்தம் பாதியாய் இருந்திருக்கும்
முத்தாய் உனைப் பெற்றெடுத்து
அவையத்து முதலாக உனை ஆக்க
முழு மூச்சாய் உழைத்தனரே
உன் பெற்றோர்
கல்வியிலே வித்தகியாம்
கலைகளில் நீ வல்லவளாம்
பெருமையிலே பெற்றமனம்
பொங்கியதை நாம் கண்டோம் -அந்த
அன்பு மனம் பதறப் பறித்தது யார்?
ஆண்டவனோ!

பரிதவிக்கும் அவரிழப்பைப்
பாரினிலே ஈடு செய்வார் யாரம்மா?
பிரிவுச் செய்தியது செவிதனிலே
இடியாக வந்திறங்க
இதயம் நோகுதடி இயங்க
மறுக்குதடி- எப்படி
உன் தாய் தந்தை இதைத்
தாங்கினரோ?
எண்ண முடியவில்லை
கற்பனைக்கும் எட்டவில்லை
நிழற்படக் கருவிதனில் உன்
நிழலைப் பதித்து வந்த போது
அறியவில்லை இனி நிரந்தரமாய்
இந் நிழலை மட்டும் தான்- நாம்
பார்த்திருக்க வேண்டுமென்று
பல்லாயிரம் மயில்தாண்டி
வாழ்வதனால் உன் முகத்தை
இறுதியாய் பார்கவுமில்லை
பலதை எண்ணுகின்றோம்...
பரிதவித்து நிற்கின்றோம்...
பழகிய நாள்களும்
பாசமிகு வார்த்தைகளும்
அன்று இனித்தாலும்
இன்று எரிமலையின் குழம்பாக -எம்
இதயத்தையே பொசுக்குதம்மா!



## செல்வி பிரியனி சரவணபவான்

(யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, பருத்தித்துறை)

வட்டத்தெனி, அல்வாய் மேற்கு, அல்வாய்.

**யோகன் சித்தப்பா**
குடும்பத்தினர், டென்மார்க்.

(45823) (39)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடியரசு தின விழாவை ஒட்டி சென்னையில் பலத்த பாதுகாப்பு

சென்னை, ஜன.24

குடியரசு தின விழாவை முன்னிட்டு சென்னையில் பலத்த பொலீஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குடியரசு தின விழா நிகழ்ச்சிகள் நடைபெறும் மெரீனா கடற்கரை பகுதியில் கண்காணிப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

சென்னை காமராஜர் சாலையில் உள்ள வெலிங்ரன் சீமாட்டி கல்வியியல் கல்லூரி வளாகத்தில் வைக்கப்பட்டுள்ள அல்ங்கார வாகனங்களுக்கு பொலீஸ் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது.

குடியரசு தின விழாவை முன்னிட்டு சென்னை மத்திய ரயில் நிலையம் மற்றும் எழும்பூர் ரயில் நிலையங்களில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. பயணிகள் அனைவரும் 'மெட்டல் டிடெக்டர்' மூலம் சோதனை செய்யப்படுகின்றனர். அதேபோல கோயம்பேடு பஸ்நிலையத்திலும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

மீனம்பாக்கம் விமான நிலையத்தில் பாதுகாப்புக் கெடுபிடிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. எந்நேரமும் பொலீஸார் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர். மத்திய தொழில் பாதுகாப்பு படையினர் அதிக எண்ணிக்கையில் குவிக்கப்பட்டுள்ளனர்.

மக்கள் அதிக எண்ணிக்கையில் கூடும் வர்த்தக வளாகங்கள் உள்ளிட்ட பகுதிகளில் பொலீஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. வெடிகுண்டு நிபுணர்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

சென்னையில் நடைபெறவிருக்கும் குடியரசு தின விழா அணி வகுப்புக்காக முப்படை வீரர்கள் நேற்று ஒத்திகையில் ஈடுபட்ட காட்சி.



## சேலையில் திருக்குறள்கள்!

நாகர்கோவிலைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் ஆயிரத்து 330 திருக்குறள்களை 133 அடி நீளமுள்ள துணியில் தலைகீழாக 'எம்ப்ராய்டரிங்' செய்து புதிய சாதனை படைத்துள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலைச் சேர்ந்த இளைஞர் காளிகுமார். பால் வியாபாரம் செய்து வரும் இவர் உலக பொதுமறையான திருக்குறளின் சிறப்பை, நூதன முறையில் பரப்ப முடிவு செய்தார். அதன்படி ஆயிரத்து 330 குறள்களை, 130 அடி நீளமுள்ள துணியில் தலைகீழாக 'எம்ப்ராய்டரிங்' முறையில் எழுதி வடிவமைத்துள்ளார். கண்ணாடியின் மூலம் பார்த்தால் நேராகத் தெரியும்படி குறள்கள் எழுதப்பட்டுள்ளன. 'எம்ப்ராய்டரிங்' முறையில் காளிகுமார் எழுதியுள்ள குறள்களை பள்ளி மாணவ - மாணவிகள், ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்கள் பார்த்துப் பாராட்டினர். (ஐ)

உலக அரங்கில்

## ஜப்பானில் கடும் பனிப்பொழிவு: 125 பேருக்கு மேற்பட்டோர் காயம்

டோக்கியோ,ஜன.24

ஜப்பான் நாட்டில் கடந்த 8 ஆண்டுகளில் இருந்திராத வகையில் கடும் பனிப்பொழிவு காணப்படுகிறது. தலைநகர் டோக்கியோவில் பனிப்பொழிவால் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டிருக்கிறது.

வீதிகளில் குவிந்துள்ள பனிக்கட்டிகளைக் கடக்கமுயன்ற போது இடறி விழுந்தும் வேறு வகையிலும் 125 இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். பலருக்கு எலும்பு முறிவே ஏற்பட்டிருகிறது.

டோக்கியோவை அடுத்துள்ள நாரிடா விமான நிலையத்தில் சனிக்கிழமை இரவு 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயணிகள் சிக்கித் தவித்தனர். பனி அதிகமாகப் பெய்ததால் விமான நிலைய ஓடுபாதைகளில் அவை குவிந்தன. விமான நிலைய ஊழியர்களால் அவற்றை அகற்ற முடியவில்லை. எனவே 50 சர்வதேச விமானங்களின் சேவை ரத்துச் செய்யப்பட்டது.

எனவே, விமானத்தில் செல்ல வந்த 10 ஆயிரம் பயணிகள் செய்வதறியாது திகைத்தனர். விமானம் ரத்துச் செய்யப்பட்டதல்லாமல் நகருக்குச் செல்லும் வழியிலும் பனிக்கட்டிகள் இருந்ததால் வாகனப் போக்குவரத்தும் நின்றது.

இதையடுத்து விமான நிலைய நிர்வாகம் எல்லா பயணிகளுக்கும் கம்பளிப் போர்வை, 'ஸ்வெட்டர்' போன்றவற்றை அளித்தது.

விமான நிலையத்தில் இலவசமாகவே தங்க அனுமதி கொடுத்தது. தேநீர் போன்ற பானங்களை அனைவருக்கும் வழங்கி குளிரைத் தணித்தது.

பயணிகள் தங்கவைக்கப்பட்ட இடங்களில் எல்லாம் கூடுதல் நேரத்திற்கு விளக்குகளை எரியவிடவும் வெப்பமூட்டிகளைப் போடவும் அதிகாரிகள் அனுமதி அளித்தனர். (ஐ)

## தாய்வானில் நிலநடுக்கம்

தைபே,ஜன.24

தாய்வான் நாட்டில் கடந்த ஞாயிற்று கிழமை லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிச்டர் அளவு மானியில் 5.1 அலகாக அது பதிவாகியிருந்தது. உயிர்ச்சேதம், உடைமைகள் சேதம் பற்றி தகவல் ஏதும் இல்லை.

ஹுவாலியன் என்ற நகருக்கு 70.9 கிலோ மீற்றர் தொலைவில் நிலநடுக்கத்தின் மையம் இருந்தது.

தாய்வானில் நிலநடுக்கம் அடிக்கடி ஏற்படுகிறது. 2 பெரிய பாறை அடுக்குகள் சந்திக்கும் இடத்துக்கு அருகில் இந்நாடு இருக்கிறது சமீபகாலத்தில் 1999 செப்ரெம்பரில் தான் இந்நாட்டில் மிகப்பெரிய நிலநடுக்கம் ஏற்பட்டது. அதில் 2,400 பேர் இறந்தனர்.(ஐ)



லாஸ்வேகாஸில் மிஸ் அமெரிக்கா அழகிப் போட்டியில் சிறந்த அழகியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஜெனிபர் பெரி.

## ஈராக்கில் கடத்தப்பட்ட பொலீஸாரில் 23 பேரின் சடலங்கள் கண்டுபிடிப்பு

பக்தாக், ஜன.24

கடந்த திங்கட்கிழமை கடத்தப்பட்ட பொலீஸ் தொண்டர்படையைச் சேர்ந்த 23 பேரின் சடலங்களை ஈராக்கிய பாதுகாப்பு அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

தலைநகர் பக்தாக்திற்கு வடக்கே ஒரு திறந்த வெளியில் இவர்களின் சடலங்கள் சூட்டுக் காயங்களுடன் கிடந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த திங்கட்கிழமை மாலை வடக்கு நகரான சமராவை நோக்கி பஸ் வண்டியில் சென்று கொண்டிருக்கையில் தீவிரவாதிகளால் பிடித் துச் செல்லப்பட்ட 35 பேர்களில் இவர்களும் அடங்குவர். பொலீஸ் பயிற்சி பாடசாலையில் சேர்வதற்கு வந்த இவர்களின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படாததினால் தமது சொந்த இடங்களிற்கு திரும்பிக் கொண்டிருந்தார்கள். ஏனைய 12 பேரின் சடலங்கள் கடந்த வாரம் கண்டுபிடிக்கப்பட்டிருந்தன.

பாதுகாப்புப் படைகளில் சேர வருகின்றவர்களை தீவிரவாதிகள் குறிவைத்துத் தாக்கும் சம்பவங்களில் மிகப் பிந்தி நடந்துள்ள தாக்குதல் இதுவாகும். (ப)

## 'அஸாம்' தீவிரவாதிகளுடன் மீண்டும் இந்திய அரசு பேச்சு

புதுடில்லி. ஜன.24

அஸாம் மாநிலத்தைச் சேர்ந்த தீவிரவாத அமைப்பான 'உல்பா'வுடன் பெப்ரவரி 7 ஆம் திகதி மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்று இந்திய அரசு தெரிவித்துள்ளது.

இத்தகவலை ஞானபீட விருது பெற்ற எழுத்தாளரான இந்திரா கோஸ்வாமி தெரிவித்தார்.

இப்பேச்சுவார்த்தையில் பங்கேற்க மக்கள் ஆலோசனைக் குழுவை 'உல்பா' நியமித்துள்ளது. அதன் தலைவராக இருப்பவர் இந்திரா கோஸ்வாமி.

"உல்பாவின் மக்கள் ஆலோசனைக் குழுவுடன் அரசு அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தையை பெப்ரவரி 7 ஆம் திகதி நடத்தவுள்ளது என்று மத்திய அரசின் தேசிய பாதுகாப்பு ஆலோசகரான எம்.கே. நாராயணன் திங்கட்கிழமை என்னிடம் தெரிவித்தார். அஸாம் தீவிரவாதிகளின் பிரச்சனைக்குத் தீர்வுகாண அக்கறையுடன் அரசு எடுக்கும் முயற்சிகளைக் கருத்தில் கொண்டு, அனைத்து வன் செயல்களையும் 'உல்பா' உடனடியாக நிறுத்த வேண்டும்." என்று பி.ரி.ஐ செய்தி நிறுவனத்திற்கு அளித்துள்ள பேட்டியில் இந்திரா கோஸ்வாமி கோரிக்கை விடுத்துள்ளார். (ஐ)




## மிகப்பெரிய பூகம்பம் ஜப்பானைத் தாக்கும்?

டோக்கியோ, ஜன.24

ஜப்பானின் வட கிழக்குப் பகுதியை மிகப் பெரிய பூகம்பம் ஒன்று விரைவில் தாக்கும். தொடர்ந்து 22 மீற்றர் உயரத்திற்கு சுனாமிப் பேரலைகள் உருவாகும். அதில் மூவாயிரம் பேருக்கு மேல் மடிந்துபோகலாம். இந்த சுனாமி பேரலைகளால் ஒரு லட்சம் கோடி ரூபா அளவுக்கு சேதம் ஏற்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 18ஆம் திகதி ஜப்பானில் சுனாமி பேரலை தடுப்பு அமைப்பு தனது ஆய்வறிக்கை ஒன்றை அரசிடம் சமர்ப்பித்தது அதிலுள்ள அதிர்ச்சித் தகவல்கள் பற்றிய விவரம் வருமாறு:-

உலகிலேயே ஜப்பான்தான் பூகம்பத்தால் அதிகம் பாதிக்கப்படக்கூடிய நாடு. எரிமலைகளை அதிகம் கொண்ட நாடும் இதுவே. கடந்த 2004ஆம் ஆண்டு வடக்கு நிகட்டாவில் தாக்கிய பூகம்பம் 6.8 ரிச்டர் அளவைக் கொண்டது. அதில் 40 பேர் பலியாகினர். விரைவில் ஒரு பூகம்பம் ஜப்பானைத் தாக்க உள்ளது. இந்தப் பூகம்பம் டோஹோகூவில் மையம் கொண்டிருக்கும். இது ஜப்பானிக் வடகிழக்கு மற்றும் வடக்கு முனையிலுள்ள ஹோக்கைடோ தீவின் கிழக்கு கடற்கரைப் பகுதிளையும் தாக்கும். அப்போது 22 மீற்றர் உயரத்திற்கு மேல் சுனாமிப் பேரலைகள் தோன்றும். இந்தத் தாக்குதலில் இரண்டாயிரத்து 700 பேர் மடியலாம். ஒன்பதாயிரத்து 400 கட்டடங்கள் பலத்த சேதமடையும் இந்தத் தாக்குதலால் ஜப்பானுக்கு ரூபாய் ஒரு லட்சம் கோடிக்கு மேல் சேதம் ஏற்படும்.

இவ்வாறு அந்த ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பூகம்பத்தின் அளவு எத்தனை ரிச்டர் அளவாக இருக்கும் என்பது பற்றிய விவரம் அந்த அறிக்கையில் தெளிவாக இல்லை. (ஐ)

## புதிய பாபபரசருக்கு பாதுகாப்பு அளிப்பது முன்பு போல் கடினமல்ல

முன்னாள் பாப்பரசரான இரண்டாவது ஜோன் போலைப் பாதுகாத்ததை விட இப்போதைய பாப்பரசரான 16 ஆவது பெனடிக்கைப் பாதுகாப்பது எளிதாக இருக்கிறது என்று அவருக்குப் பாதுகாப்பு அளிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள சுவிஸ் இராணுவத் தலைவர் கூறுகிறார்.

சுவிற்ஸர்லாந்து இராணுவத்தைச் சேர்ந்தவர்கள்தான் பாப்பரசருக்கு பாதுகாப்பு அளிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். கேணல் [illegible] தலைமையில் 110 வீரர்கள் அப்படையில் உள்ளனர். பாப் இரண்டாவது ஜோன் போல் மீது 1981 இல் துருக்கியைச் சேர்ந்த மெஹ்மத் அலி ஆகா என்பவர் துப்பாக்கியால் சுட்டார் அதில் அவர் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பினார்.

ஆனால், இப்போதைய பாப்பரசர் மீது யாரும் தாக்குதல் நடத்தக்கூடிய வாய்ப்பும் இல்லை. தாக்குதல் நடத்துவது எளிதும் அல்ல. ஏனென்றால் அவர் அரிதாகத்தான் வத்திகனை விட்டு வெளியே செல்கிறார் பொது மக்களைச் சந்திக்கும் போதும் கவனத்துடன் தேர்தெடுத்துத்தான் சந்திக்கிறார். - என்று சுவிஸ் படையின் கேணல் எல்மர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி வேலைகள்

யாழ்ப்பாணம்,ஜன.24

நல்லூர் பிரதேச சபையினால் 2006ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் சபைநிதியில் இருந்து பின்வரும் வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

அவையாவன:-

★கொக்குவில் உப அலுவலகம் திருத்தம்
★திருநெல்வேலி சந்தைக்கு குழாய்க்கிணறு அமைத்தல்
★கொக்குவில் சந்தைக்கு நீர்த்தாங்கி அமைத்தல்
★கொட்டைக்காடு மயானத்திற்கு எல்லைச் சுவர் அமைத்தல்.

(எ-12)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திக்கிரியை அழைப்பும் நன்றி நவில்லும்

அன்னை மடியில் 12 - 03 - 1945



ஆண்டவன் அடியில் 27 - 12 - 2005

திருமதி
**வல்லிபுரம் குணவதி**

கடந்த 27.12.2005 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவியின் திடீர் மறைவுச் செய்தியறிந்து ஓடோடி வந்து உதவிகள் பல புரிந்தும் ஆறுதல் கூறியும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்ட உள்ளங்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள், சுற்றத்தாருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் அந்தியேட்டிக்கிரியை இன்று (24.01.2006) செவ்வாய்க்கிழமை காரைநகர் ஆழங்கன்று வைரவர் கோயிலடியிலும் நாளை மறுதினம் (26.01.2006) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண ஆத்மாசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

சடையாளி,
காரைநகர்.
(45929)(32-19-11)

கணவர்
வல்லிபுரம்.


## மரண அறிவித்தல்கள்

### இராமலிங்கம் விஸ்வநாதன்



சுழிபுரம், கல்லைவேம்படியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் விஸ்வநாதன் (ஓய்வுபெற்ற புகையிரத அதிபர்) 23.01.2006 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் இராமலிங்கம் - வேதவனம் தம்பதியரின் அன்பு மகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் தம்பு - அன்னமுத்து தம்பதியரின் மூத்த மருமகனும் திருமதி இரத்தினம் முதலியார், காலஞ்சென்ற தெய்வானைப்பிள்ளை கந்தசாமி, இராசபட்சம் (நீர்ப்பாசனத் திணைக்களம்), முருகேசம்பிள்ளை (அதிபர்) மற்றும் கந்தசாமி (பொலீஸ் உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் கந்தவனம் (தம்பு கடை), திருமதி அருணாசலம் தங்கமுத்து, திருமதி முருகேசம்பிள்ளை மனோன்மணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.01.2006) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருவடிநிலை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்லைவேம்படி,
சுழிபுரம்.
(45925)
(32-19-11)

தகவல்:
மகேஸ்வரி விஸ்வநாதன்
(மனைவி).

### திருமதி செல்லத்துரை மங்களம் (ரோசலீன்)



சிங்கப்பூரை பிறப்பிடமாகவும் கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை மங்களம் (ரோசலீன்) 22.01.2006 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும் பத்மாவதி (ஜேர்மனி), சறோஜினிதேவி (கனடா), மோகன் (ஜேர்மனி), மதிமுகன், மனோதீபன் (ஜேர்மனி), சியாமளா, காலஞ்சென்ற காந்திமதி, வளர்மதி (ஜேர்மனி), மால்மருகன் (மால்), காலஞ்சென்ற மஞ்சுளாதேவி, மயூறேயன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் பெருந்தவராசா, லோகேஸ்வரன், பவானி, லிங்கேஸ்வரி, சத்தியதேவி, செல்லத்துரை, யோகநாதன், ரஜினி, சுபாஜினி ஆகியோரின் மாமியாரும் மலரவன், டர்ஜன், பானுசன், சதுர்ஜன், தனுஜா, நிரோஜன், வினுஜா, ஜெதுசன், லெலக்சன், துவாரகன், டிலானி, பிரவீன், அனுஜா, திருக்குமரன், பானுக்குமரன், ஜெனன், அனோஜன், நிவேதா, குருஷிகா, யோகவாணி, பிரகாஷ் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

"திருமால் இல்லம்",
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.
(45925)(32-11-19)

தகவல்:
குடும்பத்தினர்.


## தவறிவிட்டது

சூ.ஜெபரட்ணம் முல்லைத்தீவு,தபால் அத்தியட்சகர் என்பவரது பயணப்பொதி யாழ்ப்பாணத்திற்கும் - மிருசுவிலிற்கும் இடையில் வழியில் 23.01.2006 காலை 8 - 9 மணிக்கிடையில் தவறவிடப்பட்டுள்ளது. இதனைக் கண்டெடுத்தவர்கள் இல.6, ஒடக்கரை விதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அல்லது அருகி லுள்ள தபாலகத்தில் ஒப்படைத்து உதவவும்.

தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசி இல.
021 - 222 7032 (45931)(32-11-19)


## நாடாளுமன்ற அலுவலர் பதவிக்கு விண்ணப்பம்

கொழும்பு,ஜன.24

இலங்கை நாடாளுமன்றத்தினால் நாடாளுமன்ற உத்தியோகத்தர்கள் பதவிக்கான விண் ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்ப முடிவுதிகதி பெப்ரவரி மாதம் 17ஆம் திகதியாகும்.

ஆகக் குறைந்தது பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரியாக இருப்பதுடன் ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் மொழியில் (தமிழ், சிங்களம், ஆங்கிலம் மற்றும் ஆங்கில இலக்கியத்தில்) சித்தியுடன் கணிதம் அல்லது எண் கணிதத்திலும் இரண்டு தடவைகளுக்கு மேற்படாது சித்தி அடைந்திருக்க வேண்டும்.

அல்ல அரச சேவையில் பத்துவருட கால அரச பொது எழுதுவினைஞர் சேவை மற்றும் மாகாண சேவையில் திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்தவர்களும் இதற்கு விண்ணப்பிக்கமுடியும்.

விண்ணப்பங்கள் ''நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் இலங்கை நாடாளுமன்றம், ஸ்ரீ ஜெயவர்த்தனாபுர கோட்டே' இன்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## கட்டாக்காலி ஆடு, மாடுகளால் பயிரழிவு

வடமராட்சி, ஜன.24

வடமராட்சிப் பிரதேசத்தில் கட்டாக்காலி ஆடு, மாடுகளினால் பயிர்கள் அழிக்கப்பட்டு வருவதாக விவசாயிகள் புகார் தெரிவித்துள்ளனர்.

இப்பிரதேசத்தில் விவசாயிகள் புகையிலை, வெங்காயம் ஆகிய பணப் பயிர்களைப்பெருமளவில் பயிரிட்டுள்ளனர்.

இந்நிலையில் கால்நடைகளை வளர்ப்போர் ஆடு, மாடுகளைக் கட்டி வளர்க்காமல் விடுவதால் அவை இப்பயிர்வகைகளை அழித்துவருவதாகவும் -

ஆடு, மாடுகளைக் கட்டி வளர்த்து விவசாயிகளைப் பாதுகாக்கும்படி கால்நடை வளர்ப்போரை விவசாயிகள் கேட்டுள்ளனர். (எ-173)

## நாயுடன் மோதி ஒருவர் காயம்!

நாய்களினால் துரத்தப்பட்டு வேகமாக ஓடிவந்த நாய், வீதியில் வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் மோட்டார் சைக்கிளோட்டி தூக்கி வீசப்பட்டு காயமடைந்தார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மீசாலையில் இடம்பெற்றது. இச்சம்பவத்தில் பொ.நடராசா (வயது 50) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சைபெற்றுவருகிறார். (204-117)


மட்டுவில்
மோகனதாஸ் சனசமூக நிலைய
## கட்டடத் திறப்பு விழா

| | | |
|---|---|---|
| காலம் | : | 25.01.2006 புதன்கிழமை |
| நேரம் | : | பிற்பகல் 2 மணி |
| தலைமை | : | திரு.கி.முகுந்தன் (நிலையத் தலைவர்) |

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மட்டுவில்.
(45940)(32-11-19)

மோகனதாஸ் சனசமூக நிலையத்தினர்.



## கண்ணீர் அஞ்சலி



எமது மதிப்பிற்குரிய
லயன் ஆ.சாந்தலிங்கம்
அவர்களின் தாய்
திருமதி
**ஆறுமுகம் அமராவதி**

அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாணம்.
(45932)(32-11-19)

ருவிங்கிள் ஸ்ரார் நிறுவனத்தினர்.



## கண்ணீர்க் காணிக்கை



திருமதி போஜன் அர்த்தநாரீஸ்வரி
மலர்வு: 27.10.1954



செல்வி போஜன் சண்முகா (சாயி)
மலர்வு: 26.03.1982
உதிர்வு: 16.01.2006



திருமதி யோகேஸ்வரன் ரேணுகா
மலர்வு: 23.05.1975

எமது உயிர் நண்பியும் G.A.Q.2005 மாணவியுமாகிய சாயி (சண்முகா), அவரது தாய், சகோதரி ஆகியோருக்கு எமது நெஞ்சம் கனக்கும் அஞ்சலிகள். அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(45938)(42-32-11-19)

G.A.Q. 2005 மாணவர்கள்.


## வடக்கு - கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத்திட்டம் யாழ். மாவட்டம் கட்டம் II - 2006

### தொகுதி - II இல் தெரிவு செய்யப்பட்ட கிராமங்கள்

உலக வங்கியின் நிதி உதவியுடன் வடக்கு - கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத் திட்டத்தின் கீழ் இரண்டாம் கட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு யாழ்.மாவட்டத்தில் தொகுதி இரண்டில் கீழ்க்காணும் கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன என்பதனை அறியத்தருகின்றேன். இக் கிராமத் தெரிவில் ஏதாவது குறைகள்/ஆட்சேபனைகள் இருப்பின் எனக்கு எழுத்து மூலம் ஏழு (07) நாள்களுக்குள் அறியத்தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

| தொ. இல. | பிரதேச செயலர் பிரிவு | கிராம அலுவலர் பிரிவு | தெரிவுசெய்யப்பட்ட கிராமத்தின் பெயர் |
|---|---|---|---|
| 81 | சங்கானை | சுழிபுரம் மேற்கு | பெரியபுலோ |
| 82 | சங்கானை | பனிப்புலம் | குஞ்சன்கலட்டி |
| 83 | சங்கானை | வட்டு மேற்கு | செம்பாட்டான் தோட்டம் |
| 84 | சங்கானை | சுழிபுரம்கிழக்கு | பாணாவெட்டி |
| 85 | சங்கானை | சுழிபுரம் மத்தி | குடாக்கனை |
| 86 | சங்கானை | மூளாய் | வேரம் |
| 87 | சங்கானை | பண்ணாகம் | காளையடி |
| 88 | சங்கானை | வட்டு. தெற்கு | முதலிய கோவிலடி |
| 89 | சங்கானை | மூளாய் | பிள்ளையார் கோவிலடி |
| 90 | கரவெட்டி | கரவெட்டி கிழக்கு | காட்டுப்புலம் |
| 91 | கரவெட்டி | சமரபாகு | இலந்தைக்காடு |
| 92 | கரவெட்டி | கரணவாய் வடமேற்கு | கொற்றாவத்தை |
| 93 | கரவெட்டி | கப்பூது | அந்தணத்திடல் |
| 94 | கரவெட்டி | கப்பூது | கரம்பான் |
| 95 | கரவெட்டி | கப்பூது | கப்பூது |
| 96 | வேலணை | வேலணை கிழக்கு | வேலணை கிழக்கு |
| 97 | வேலணை | மண்கும்பான் | மண்கும்பான் |
| 98 | வேலணை | வேலணை தெற்கு | வேலணை தெற்கு |
| 99 | வேலணை | வேலணை மேற்கு மத்தி | வேலணை மேற்கு மத்தி |
| 100 | வேலணை | வேலணை கிழக்கு மத்தி | வேலணை கிழக்கு மத்தி |
| 101 | சாவகச்சேரி | கல்வயல் | கல்வயல் |
| 102 | சாவகச்சேரி | சரசாலை தெற்கு | சரசாலை தெற்கு |
| 103 | சாவகச்சேரி | மட்டுவில் வடக்கு | மட்டுவில் வடக்கு |

மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.
(ஏ/47482)(42-32-11-19)

க.கணேஷ்
அரசாங்க அதிபர்,
யாழ்.மாவட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலை தமிழ் மக்களுக்கும் அதிகாரிகளுக்கும் 'பொங்கி எழும் மக்கள் படை' துண்டுப் பிரசுரம்

திருகோணமலை,ஜன.24

திருகோணமலை தமிழ் மக்களுக்கும் அரசசாரா அமைப்புகளின் அதிகாரிகளுக்கும் 'திருகோணமலை மாவட்ட பொங்கி எழும் மக்கள் படை' என்ற பெயரில் துண்டுப் பிரசுரங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

'திருகோணமலை மாவட்டத்தின் அரச சார்பற்ற திணைக்கள மேலாளர்களுக்கும் தமிழ் பேசும் மக்களுக்கும் அன்பான வேண்டுகோள்' என்ற தலைப்பில் திருகோணமலை மாவட்ட பொங்கி எழும் மக்கள் படையினால் இந்தப் பிரசுரம் விடுக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை நகரில் ஸ்ரீலங்கா அரசாங்கத்தாலும் அரச படைகளாலும் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக தமிழ் பேசும் மக்களின் அன்றாட வாழ்விற்கும் உயிருக்கும் மிகப் பெரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இந்த சூழ்நிலையை தமிழ் பேசும் மக்கள் ஒவ்வொருவரும் தமக்கு ஏற்பட்டுள்ள நிலை என்பதைக் கவனத்தில் எடுத்து எமது ஒன்றுபட்ட செயலின் மூலம் எமது சமூகத்தை பாதுகாப்பதோடு, பேரினவாத அரசிற்கும் படைகளுக்கும் எதிரான எமது எதிர்ப்பினை அந்தந்த வேளையில் உடனடியாகத் தெரிவிக்கவேண்டும்.

எனவே, கீழ்க்கண்ட விடயங்களை கருத்தில்கொண்டு செயற்படுமாறு தமிழ் பேசும் மக்களை அன்பு கலந்த எச்சரிக்கையுடன் வேண்டுகின்றோம்.

✱ சகல அரச, தனியார் அலுவலகங்கள், கடைகள் யாவும் மாலை 5 மணிக்கு முன்னதாக மூடப்பட்டு வீடுகளுக்குத் திரும்பக் கூடியதாக உங்கள் கடமைகளை ஒழுங்குபடுத்திக் கொள்ளுங்கள்.

✱ பொய் வதந்திகள் பரப்புவோரும் தேவையற்ற விதத்தில் பதற்றநிலையை உருவாக்குவோரும் தீவிரமாகக் கண்காணிக்கப்படுவார்கள். சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக ஈவிரக்கமற்ற முறையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

✱ கதவடைப்புப் போராட்டம் மற்றும் இறுக்கமான போராட்டம் ஏற்படும் போது பொருள்களைப் பதுக்குவதும் மற்றும் பன்மடங்கு கூட்டிவிற்பதும் எங்கள் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு சம்பந்தப்பட்டவர்கள் யார் என்பது அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இனிமேல் இவ்வாறான செயல்களில் ஈடுபடுவோர் மன்னிக்கப்படமாட்டார்கள்.

✱ கசிப்பு, கள்ளச்சாராயம், போதைப் பொருள், விபசாரம், நீலப் படம் போன்றவற்றில் சம்பந்தபட்டவர்கள், விற்பவர்கள், வாங்குபவர்கள் அனைவருக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

✱ எமது மண், எமது மக்கள், தேசியம் என்ற எண்ணப்பாடு இன்றி ஸ்ரீலங்கா அரசுக்கு தமிழ் மக்களைக் காட்டிக்கொடுக்கும் உயர் அதிகாரிகளுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

✱ விருந்துபசாரங்களிலும் பொது வைபவங்களிலும் ஸ்ரீலங்கா படைத்துறை உயர் அதிகாரிகளுடன் கொஞ்சிக் குலாவி மது அருந்துவோரும் பின்னர் தமிழ் மக்களுக்கு சேவை செய்வோர் போல் காட்டிக் கொள்ளும் பலரைப் பற்றி எமக்கு உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் கிடைத்த வண்ணமே உள்ளன. இச்செயலில் ஈடுபடும் எந்த தமிழ் மகனும் மன்னிக்கப்படமாட்டார்.

✱ தனியார் கல்வி நிறுவனங்கள் எக்காரணத்தாலும் காலை 6 மணிக்கு முன்னும் மாலை 6 மணிக்குப் பின்னும் நடத்தப்படக் கூடாது. இதனை மீறுவோர் மீது தனியார் கல்வி நிறுவனம் மூடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

✱ வீதிகளில் கூட்டமாக நிற்பதும் குடித்து கும்மாளம் போடுவதும் இரவு நேரக் கேளிக்கைகளில் ஈடுபடுவதும் பெண்களை நையாண்டி செய்வதும் எந்த வகையிலும் நியாயப்படுத்தப்பட முடியாத குற்றமாக உரியவர்கள் கருதுகிறார்கள். எனவே, இத்தகைய செயலில் ஈடுபடுபவர்கள் உடனடியாக தங்கள் நடவடிக்கைகளை நிறுத்துமாறு கோருகின்றோம்.

இவற்றை மீறி நடப்பவர் மீது 01.02.2006 இல் இருந்து எவ்வித ஈவிரக்கமும் இன்றி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மன வருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.

தமிழரின் தாகம் பண்பாடு மிக்க தமிழீழத் தாயகம் - என்று அந்தப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## சிங்கள வர்த்தகர்களை மிரட்டும் சிங்கள அமைப்பு

திருகோணமலை,ஜன.24

விடுதலைப் புலிகளுடன் ஒத்துழைக்கும் சிங்கள வர்த்தகர்களை துரோகிகள் என்று மிரட்டும் சிங்கள மொழியிலான துண்டுப்பிரசுரங்கள் திருகோணமலையில் வெளியிடப்பட்டுள்ளன.

கிழக்கு ஆயுத சிங்கள முன்னணி என்ற பெயரில் வெளியிடப்பட்டிருக்கும் பிரசுரங்களில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சிங்களத் துரோகிகளான வர்த்தகர்கள் அனைவரும் பெப்ரவரி முதலாம் திகதிக்கு முன் வெளியேறிவிடவேண்டும். அவ்வாறு வெளியேறத் தவறும் பட்சத்தில் அவர்களின் ரத்தத்தில் பெப்ரவரி 4ஆம் நாள் ஸ்ரீலங்காவின் சுதந்திர நாள் கொண்டாடப்படும் என்று அந்தப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1988-89 காலப் பகுதியில் ஜே.வி.பியின் பயங்கரவாதம் தலைவிரித்தாடிய போது அதன் முன்னணி ஒன்று தாய் நாட்டு பற்றாளர் இயக்கம் என்ற பெயரில் வெளியிட்டு வந்த துண்டுப் பிரசுரங்களை ஒத்ததாக இதுவும் இருக்கின்றது என்று சிங்கள இணையத் தளம் ஒன்று தெரிவிக்கிறது.

திருமலையில் இத்தகைய எச்சரிக்கைகளைப் பெற்ற சிங்கள வர்த்தகர் சிலர் ஏற்கனவே தமது வசிப்பிடங்களை விட்டு வெளியேறியுள்ளனர் என்று இச்செய்தி தெரிவிக்கின்றது.

அண்மையில் திருமலையில் நான்கு தினங்கள் சிங்கள ஹர்த்தால் நடந்ததைத் தொடர்ந்து இந்த சிங்கள ஆயுதக் குழுவின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன.

ஸ்ரீலங்காவின் முப்படைகளையும் பாராட்டுவதுடன் திருகோணமலையை சிங்களவர்களுக்காக காப்பாற்றுவதா அல்லது புலிகளிடம் பறி கொடுப்பதா என்று முடிவு செய்ய வேண்டிய காலம் வந்துவிட்டது என்றும் தெரிவிக்கும் இந்தத் துண்டுப் பிரசுரம் சிங்கள இயக்கங்கள் அனைத்தையும் ஒன்றுபடுமாறும் எழுந்து வந்து போராடுமாறும் அழைப்பு விடுக்கின்றது. (ஐ)

## 'ஆடலிறை குழந்தைப் பாடல்கள்' நூல் வெளியீட்டுவிழா

யாழ். இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் மயிலங்கூடலூர் பி.நடராசன் எழுதிய 'ஆடலிறை குழந்தைப் பாடல்கள்' என்னும் நூலின் வெளியீட்டுவிழா எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். இலக்கிய வட்டத்தலைவர் கலாநிதி க.குணராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் ஆசியுரையை மூதறிஞர் தி.ச.வரதராசனும் (வரதர்), வாழ்த்துரைகளை ஸ்கந்தவரோதயக் கல்லூரி உப அதிபர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன், சைவப் புலவர் கலாபூஷணம் சு.செல்லத்துரை ஆகியோரும் நிகழ்த்துவர்.

வெளியீட்டுரையை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசு நிகழ்த்த நூலின் முதற் பிரதியை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அதிபர் பொ.சுந்தரலிங்கம் வெளியிட்டுவைப்பார்.

தொடர்ந்து நூல் மதிப்புரைகளைச் சைவ வித்தியாவிருத்திச் சங்கம் நிதிச் செயலர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், கவிஞர் சோ.பத்மநாதன், யாழ். பல்கலைகழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா ஆகியோர் நிகழ்த்துவர். (எ-204)

## பண்டத்தரிப்பு ஆஸ்பத்திரியில்

# தடுப்பூசி ஏற்றுவதற்கு 'சிறிஞ்ச்' எடுத்து வருமாறு அறிவுறுத்து

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையில் ஏற்பு தடுப்பூசி மருந்து ஏற்ற வரும் நோயாளர்கள் அந்த ஊசி ஏற்றுவதற்கு பயன்படுத்தப்படும் 'சிறிஞ்சை' வெளியில் இருந்து வாங்கிவரவேண்டும் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன் இங்கு கர்ப்பத்தடை ஊசி மருந்து ஏற்றவரும் பெண்களும் இந்த 'சிறிஞ்சை' வாங்கி வரவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த சிறிஞ்சுக்கு வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாகவே இதனை வெளியில் வாங்கி வருமாறு நோயாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை- இந்தியாவிலுள்ள மருந்து உற்பத்தி நிறுவனம் ஒன்று உற்பத்தி செய்த "Tech-Disposable Syringe - 5 ml" என்ற வகை சிறிஞ்சை வைத்தியசாலையில் பயன்படுத்துவதைத் தடுக்குமாறு கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சின் மருந்து விநியோகப் பிரிவின் பணிப்பாளர் வெளியிட்டுள்ள சுற்றறிக்கை ஒன்றில் அறிவுறுத்தியுள்ளார்.

தேசிய தர நிர்ணய பரிசோதனைக் கூடம் இதுபற்றி ஆராய்ந்து தெரிவிக்கப்பட்டதை அடுத்து மேற்படி வகை சிறிஞ்ச் பாவனைக்கு தீங்கானது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றிய சுற்றறிக்கை ஒன்று சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது. குறித்த சுற்றறிக்கை யாழ். மாவட்டத்திலுள்ள அரச வைத்தியசாலைக்கும் கடந்த வாரம் கிடைத்துள்ளதாகத் தெரியவருகின்றது. (எ-135)



கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் நாவற்குழிப் பகுதியில் இடம்பெற்ற விபத்து ஒன்றில் உயிரிழந்த குடும்பஸ்தருக்கான ஆயுள் காப்புறுதி இழப்பீட்டுத் தொகையினை யூனியன் அஷ்யூரன்ஸ் காப்புறுதி வழங்கியது. நேற்றுக் காலை சாவகச்சேரியில் அதன் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வின்போது 6 லட்சத்து 74 ஆயிரம் ரூபா தொகைக்குரிய காசோலையினை டாக்டர் எஸ்.எஸ்.அருளானந்தம் திருமதி சதீஸிடம் கையளித்தார். அருகில் யூனியன் அஷ்யூரன்ஸ் யாழ்.பிராந்திய முகாமையாளர் சி.என்.மதிவதனனும் காணப்படுகின்றார். நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒருபகுதியினரை அடுத்துள்ள படத்தில் காணலாம்.

(படங்கள்: பிரபா)

## விபத்தில் உயிரிழந்தவரது மனைவிக்கு 'யூனியன் அஷ்யூரன்ஸ்' காப்புறுதி இழப்பீடு

யாழ்ப்பாணம்,ஜன.24

விபத்து ஒன்றில் உயிரிழந்த குடும்பஸ்தர் ஒருவருக்கு 'யூனியன் அஷ்யூரன்ஸ்' காப்புறுதி நிறுவனத்தின் யாழ்.பிராந்தியக் கிளையினால் ஆயுள்காப்புறுதி இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டது.

நேற்றுக்காலை சாவகச்சேரி நகரில் அமைந்துள்ள அதன் கிளை அலுவலகத்தில் காசோலை கையளிக்கும் நிகழ்வு நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு யூனியன் அஷ்யூரன்ஸ் காப்புறுதி நிறுவனத்தின் யாழ்.பிராந்திய முகாமையாளர் சி.என்.மதிவதனன் தலைமை வகித்தார் -

இதன்போது விபத்தில் உயிரிழந்த வீடியோக் கடை உரிமையாளர் இராமலிங்கம் சதீஸ் என்பவரது ஆயுள் காப்புறுதி இழப்பீட்டுத் தெகையான 6 லட்சத்து 74 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலையினை அவரது துணைவியரிடம் டாக்டர் எஸ்.எஸ்.அருளானந்தம் கையளித்தார்.

இந்த நிகழ்வில் யாழ்.பிராந்திய விற்பனை நிறைவேற்று அதிகாரி ரி.யூட் பிளவியன் சாவகச்சேரி வைத்தியசாலை வைத்தியர் தயாளன், சாவகச்சேரி கைத்தொழில் வணிக மன்றத் தலைவர் ப.மகாலிங்கம் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 24 ஆம் திகதி நாவற்குழிப் பகுதியில் ஓட்டோ ஒன்றும் மினிபஸ் ஒன்றும் விபத்துக்குள்ளானபோது ஓட்டோவில் சென்ற இவர் உயிரிழந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கனேடிய கொன்சர் வேடிவ் கட்சியின்

# இலங்கைத் தமிழர் பற்றிய கடும் போக்கில் மாற்றம்?

ஒட்டாவா ஜன.24

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக கடும் போக்கை கடைப்பிடித்துவந்த கனேடிய கொன்சர்வேடிவ் கட்சியினர் இப்பொழுது டொரன்ரோ பகுதி தமிழ் வாக்காளர்களை தம் பக்கம் இழுப்பதற்காக அவர்களை சாந்தப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ள முயன்று வருகின்றது.

அக்கட்சியின் உள்வட்டாரத்திலிருந்து கனேடிய பத்திரிகைத் துறைக்கு கிடைத்துள்ள மின் அஞ்சல் மூலம் இந்த விவரம் தெரியவந்துள்ளது.

கொன்சர் வேடிவ்கள் இப்பொழுதுதான் இனரீதியிலான அரசியல் பற்றிய கடின பாடங்களைப் படிக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

புலிகள் தொடர்பாக தேர்தல் காலத்தில் எதுவும் பேசவில்லையென்று கட்சி முடிவு செய்திருக்கத்தக்கதா அதை உணராத முறையில் கட்சியின் பிரதி தலைவர் பீட்டர் மெக்கே புலிகளைத் தடைசெய்வது பற்றி பேசியிருப்பது ரொறன்ரோ கிழக்குபகுதி கட்சியின் வேட்பாளர்களை கவலை கொள்ளச் செய்துள்ளது.

கடந்தவாரம் கட்சிவெளியிட்ட அறிக்கையொன்றில் இலங்கையில் தமிழ் சமூகங்களுக்கான கனேடிய உதவிகளை மேம்படுத்துவதற்கு கட்சி விரும்புவதாகவும் நோர்வேயால் மேற்கொள்ளப்படும் அமைதி முயற்சிகளில் அதிக அக்கறைக் கொள்ளப்போவதாகவும் அறிவித்துள்ளது.

ரொறன்ரோவில் ஸ்கார்பரோ வட்டாரத்தில் வாழும் கணிசமான தமிழ் வாக்காளர்களின் ஆதரவை மக்கேயின் கருத்தினால் ஏனைய வேட்பாளர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று அஞ்சப்படுகின்றது. (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## வீடு வாடகைக்கு

3ஆம் கட்டை, கல்வியங்காடு பருத்தித்துறை வீதியிலிருந்து உள்ளே மூன்றாவது வீடு வாடகைக்குண்டு (சிறிய குடும்பத்திற்கு) தொடர்பு: காலை 8 மணிக்கு முன்பு வாகினி, சிங்கராயர் வீதி, கல்வியங்காடு.
**T.P. 021 222 7398.** (45915)

## தவறிவிட்டது

**Nokia** போன் ஒன்று 22.01.2006 புன்னாலைக்கட்டுவனுக்கும் உரும்பிராய் சந்திக்கும் இடையில் பிற்பகல் 4 மணியளவில் **C.T.B** பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சோபிகா வீடியோ சென்ரர், ஆவரங்கால் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். **T.P. 0776999886** எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (45920)

அருணாசலம் இராச்குமார் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 801630987v), சாரதி அ.அட்டை (இல.. A008729817) என்பன கடந்த 02.01.2006 திங்கட்கிழமை யாழ்.நகரப்பகுதிக்குள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல.83, கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (45922)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட **Original Prima Broiler** குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 23.01.2006 திங்கட்கிழமை முதல் விநியோகிக்கப்படுகின்றன. எமது பருத்தித்துறை - நெல்லியடிக் கிளைகளிலும், ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் -19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர்.
(சி-47304)

## வீடு விற்பனைக்கு

பம்பலப்பிட்டி, சாகரா வீதிக்கு அருகில் 3 படுக்கை அறைகள் கொண்ட முதலாவது மாடியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: **T.P. 021 222 5048, 0773239159**
(45924)

## இதய அஞ்சலி

'சலன சித்திரம்' அமைப்பின் ஸ்தாபகரும் இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன பணிப்பாளருமான
**க.தேவதாசன்**
அவர்களின் அன்புத் தாய்
**திருமதி சரஸ்வதி கனகசபை**
அவர்களின் மறைவையொட்டி
எமது அனுதாபத்தைத்
தெரிவிக்கின்றோம்.
*நிர்வாகமும் உறுப்பினர்களும்*
*'சலன சித்திரம்'.*
(45911) (21.45.84)

## வீடு விற்பனைக்கு

நல்லூருக்கும் மாநகரசபைக்கும் இடைப்பட்ட இடத்தில் மூன்று அறை கொண்ட வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு:
**க.செ.கணபதிப்பிள்ளை அன்சன்ஸ்**
*948, பருத்தித்துறை றோட், நல்லூர்.*
(45928) பகீரதன் **T.P.: 0776181776**

## குளிரூட்டிய நவீன CAR வாடகைக்கு

- திருமணம் (சோடனையுடன்)
- சுற்றுலா
- விசேட வைபவங்கள்



போன்ற அனைத்துத் தேவைகளுக்கும் ஆங்கில இலக்கம் கொண்ட நவீனகார் சாரதியுடன் நியாயமான விலையில் உயர்ந்த சேவையுடன் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு:
22, சோமசுந்தரம் அவனியூ,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
**T.P.: 0777 - 903090**
**0777- 246117**
**077 - 9172730**
(45779)(26-34.45.21)

### வடமராட்சி பாடசாலைகளில் கல்வித்திட்டம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும், ஜப்பானிய செஞ்சிலுவைச் சங்கமும் இணைந்த திட்டத்தில் வடமராட்சி வடக்கு, கிழக்கு பகுதியில் ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளுள் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க பருத்தித்துறைக் கிளை நிர்வாகத்தினால் தெரிவுசெய்யப்பட்ட ஐந்து பாடசாலைகளில் 15 லட்சம் ரூபா செலவில் கல்வித்திட்டம் ஒன்று நடை முறைப்படுத்தப் படவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் ஒரு வருட காலத்திற்கு ஆங்கிலம், கணிதம், கணனிப் பயிற்சி ஆகியன நடைமுறைப்படுத்தப்படவுள்ளன என்று இலங்கை செஞ்சிலுவைச் சங்க பருத்தித்துறைக் கிளையின் தலைவர் சு.தவராசா தெரிவித்துள்ளார்.
(எ-74)

### சு.கவில் இணைகிறார் பிரதி அமைச்சர் பைலா

கொழும்பு,ஜன.24

திட்டமிடல், அமுலாக்கல் பிரதியமைச்சரும், முஸ்லிம் காங்கிரஸின் சிபாரிசில் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டவருமான ஹீசைன் பைலா, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து கொள்ளவுள்ளாரெனச் சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அழைப்பிற்கமையவே அவர் இவ்வாறு சுதந்திரக் கட்சியுடன் இணைந்து கொள்ளவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும், இது குறித்து பிரதியமைச்சர் ஹுசைன் பைலாவிடம் கேட்டபோது - இவ்வாறான அழைப்பு கிடைத்திருப்பதை உறுதிப்படுத்திய அவர் இது விடயத்தில் நாம் இன்னும் இறுதி முடிவுஎடுக்கவில்லையென்றும் குறிப்பிட்டார்.

வெகுவிரைவில் இவ்விடயம் தொடர்பில் தனது முடிவை அறிவிப்பாரென்றும் ஹீசைன் பைலா, மேலும் தெரிவித்தார். (எ-க)

## படிவம்

*மதுவரிப் பரிசோதகர் பதவிக்கு பட்டதாரிகள் விண்ணப்பிப்பதற்கான படிவம் உண்டு.*
முடிவுத்திகதி
**03.03.2006**
Bharathy Pathippakam, 430, K. K. S. Road, Jaffna.

# தெய்வீக சமாதானக் கூட்டங்கள்
## யாழ்- வீரசிங்க மண்டபம்

வாருங்கள் - தெய்வீக சமாதானத்தைப் பெறுங்கள்



பிரசங்கித்து ஜெபிப்பவர்கள்
பாஸ்டர்: ஜூலியோ கபாலியோ
சகோதரி: லினா கபாலியோ (கனடா)

காலம்:-
**தைமாதம் 25, 26ஆம் திகதிகளில்**

25 ஆம் திகதி பிற்பகல் 2 மணி தொடக்கம் 5மணி வரை
அனைவருக்குமான கூட்டம்

26 ஆம் திகதி முற்பகல் 10 மணி தொடக்கம் 12மணி வரை
பெண்களுக்கான விசேட கூட்டம்

26 ஆம் திகதி பிற்பகல் 2மணி தொடக்கம் 4மணி வரை
அனைவருக்குமான கூட்டம்
**வியாதியஸ்தர்களுக்கு ஜெபிக்கப்படும்**

*பிரவேசம் இலவசம் யாவரும் வருக*
**தொடர்புகட்கு:-**
**எக்காளத்தொனி சபை, யாழ்ப்பாணம்.**
T.P.: 021 2225632
(45291)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 01 - 09 - 1957



உதிர்வு 04 - 02 - 2005

**திருமதி சௌந்தரநாயகி கனகலிங்கம்**
திதி: அபரபக்க தசமி

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறைந்த அன்புத் தெய்வமே!
உங்களை நினைந்து உருகுகிறோம்
உம் ஆன்மா சாந்தி அடையட்டும்!

முருகேச பண்டிதர் வீதி,
சுன்னாகம் தெற்கு.
கணவர், பிள்ளைகள்,
உறவினர்கள்.
(6/47480) (21.34.45)

## துயர் பகிர்கின்றோம்

தோற்றம் 1920 - 08 - 20



மறைவு 2005 - 12 - 25

**அமரர் சின்னத்தம்பி சிவசுப்பிரமணியம்**

உடுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் உடுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சிவசுப்பிரமணியம் அவர்கள் 25.12.2005 அன்று இறைபதம் அடைந்தார். அன்னார் தனக்கென வாழாது உற்றார், சுற்றம் போற்ற சமயத் தொண்டனாக வாழ்ந்த பெருந்தகை.

அன்னார் சிறு கொட்டகையாக இருந்த உடுவில் தெற்கு, புளியடி ஞானவைரவர் ஆலயத்தை பெரும் கோயிலாக அமைப்பதற்கு ஆரம்ப கர்த்தாவாக இருந்து உழைத்து வெற்றி கண்டவர். வைரவரே துணை என நம்பி ஆயுள்வரை வைரவருக்கு தொண்டாற்றியவர்.

அன்னார் சிவபதம் அடைந்து இன்று 24.01.2006 அவரது இல்லத்தில் 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இடம்பெறும் வேளை அன்னாரின் ஆத்மாசாந்தி பெற இறைவனை இறைஞ்சி அவரது ஒரே மகளது எதிர்கால வாழ்விற்கு எல்லாம்வல்ல வைரவப் பெருமான் துணை நிக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றோம்.

புளியடி ஞானவைரவர் கோவிலடி,
சமூகத்தினர்.
(45916)(21.34.45)

## மரண அறிவித்தல்கள்

### டாக்டர் கணபதிப்பிள்ளை இராசரத்தினம்
(ஓய்வுபெற்ற M. B. B. S)

நல்லூரைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட டாக்டர் க.இராசரத்தினம் அவர்கள் கொழும்பில் 21.01.2006 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - கண்மணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தம்பிஜயா - சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மருமகனும் நாகரத்தினம் (இந்திரா) அவர்களின் பாசமிகு கணவரும் D.R. ரவீந்திரன் (ஆஸ்திரேலியா), ரவிராஜ் (லண்டன்), சியாமளா (ஜேர்மனி), ஆனந்தி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் சபாரத்தினம், காலஞ்சென்ற விஜயரத்தினம் மற்றும் துரைராசா (கனடா), காலஞ்சென்ற யோகராணி, ஜெயராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியை 26.01.2006 வியாழக்கிழமை காலை கல்கிசை மயானத்தில் நடை பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல் :
இராசா வாமதேவன்
(மைத்துனர்).
கந்தர்மடம்.
(45918)(21.34.45)

### இளையதம்பி சின்னத்துரை

கட்டுவன் - மயிலிட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல வர்த்தகரும், சந்திரா அரிசி ஆலை (வவுனியா), P.R.M. நிறுவனங்களின் உரிமையாளருமாகிய இளையதம்பி சின்னத்துரை (பத்தாயிரம்) அவர்கள் 22.01.2006 ஞாயிற்றுக்கிழமை ஆஸ்திரேலியாவில் அமரத்துவம் அடைந்து விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறியத்தரப்படும்.

தகவல் :
திருமதி சதாசிவம் விசாலாட்சி
(சகோதரி).
மாமல்லபுரம்,
மானிப்பாய் வீதி,
மருதனார்மடம்.
(45927)(21.34.45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறப்புச் சான்றிதழ் பெறுவோர் எண்ணிக்கை திடீரென அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.24

குடாநாட்டில் அதிகரித்துவரும் இராணு வக்கெடுபிடிகளை அடுத்து தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்வதற்காக பிறப்புச் சான்றிதழ்களுக்கு விண்ணப்பிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இராணுவச் சோதனையின் போது தேசிய அடையாள அட்டைகள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

இதனையடுத்து அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்பவர்களின் தொகை அதிகரித்துள்ளது. அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்பதற்கு பிறப்புச் சான்றிதழ் தேவையாகவுள்ளது.

இதன் காரணமாக பிறப்புச்சான்றிதழ்களுக்காக விண்ணப்பிப்பவர்களின் எண்ணிக்கை தற்போது அதிகரித்து வருகின்றது.

யாழ்.செயலகத்திற்கு நாளாந்தம் 300 இற்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைக்கின்றன என மேலதிக மாவட்டப் பதிவாளர் ப.பிரபாகர் தெரிவித்தார். (3-202-203)

# மீன்பிடித்தடையால் பாதிப்புற்றவர்களுக்கு நிவாரணம் வழங்க செயலகம் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.24

குடாநாட்டில் மீன்பித்தடையால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க யாழ். செயலகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

அண்மைக் காலமாக குடாநாட்டில் இடம்பெற்று வரும் அசம்பாவிதங்களை அடுத்து கடற்படையினர் மீனவர்களை கடற்றொழிலில் ஈடுபட தடைவிதித்து வருகின்றனர்.

கடற்படையினரின் இந்த நடவடிக்கை காரணமாக வல்வெட்டித்துறை, ஆதிகோயிலடி, கெருடாவில், தொண்டைமனாறு, மாருதன்கூடல், பொதித்துறை, மாதகல்துறை மற்றும் சம்வில்துறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சுமார் 2 ஆயிரம் கடற்றொழிலாளர் குடும்பங்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த பிரதேச செயலர்களுக்கு யாழ். அரச அதிபர் கே.கணேஷ் அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

இதற்கிடையில்-

யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷிற்கும் யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்களின் சமாசங்களின் சம்மேளத் தலைவர் ரி.தவரட்ணத்திற் கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று யாழ். செயல கத்தில் இடம் பெற்றது. இச்சந்திப்பு தொடர்பாக சம்மேளனத் தலைவர் கருத்துக் கூறுகையில் தெரிவித்ததாவது:

தற்போது குடாநாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக கரையோரத்தில் வாழ்கின்ற கடற்றொழிலாளர்கள் தமது தொழில் முயற்சிகளை மேற்கொள்ள முடியாது உள்ளது. இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ் அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்தேன். அதனை அடுத்து பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அரச அதிபர் தெரிவித்தார்- என்றார். (3-6-14-202-203)

# இறுதிச் சந்தர்ப்பத்தை....

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதுவே. போர் மூலம்தீர்வை எட்டமுடியாது. அதை அனைவரும் வெறுக்கிறார்கள். தென்னிலங்கையில் உள்ள ஒரு சில இனவாதிகளைத் தவிர பெரும்பா லான சமாதான விரும்பிகள் பேச்சு மூலம் தீர்வை எட்டுவதை விரும்புகிறார்கள்; வர வேற்கிறார்கள்.

இலங்கை ஆயர் சங்கம், முன்னர் பதவியில் இருந்த ஜனாதிபதியைச் சந்தித்த போதும் இப்போதுள்ள ஜனாதிபதியைச் சந்தித்த போதும் இதனைத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளது.

தென் பகுதி ஆயர்களுடன் வடக்கு - கிழக்குப் பகுதி ஆயர்களும் இணைந்து பேச்சு மூலம் அரசியல் தீர்வு எட்டப்பட வேண்டும் என்பதைத் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றனர்.

தமிழ்மக்களின் உண்மையான பிரச்சினைகள் என்ன என்பது இப்போதுதான் தென்பகுதி மக்களுக்குத் தெரிகிறது. பேச்சு மூலம் எட்டப்படும் தீர்வு தமிழ்மக்களின் அபிலாஷைகளை நிறைவு செய்யும் என்பதைச் சிங்கள மக்கள் ஏற் றுக் கொள்கிறார்கள். சிங்களவருக்கும் தமிழருக்கும் ஒரே நீதிதான். அது ஒவ் வொருவருக்கும் வேறுபட்டதல்ல.

தேசிய ஊடகங் கள் பிரச்சினைகளைச் சரியான முறையில் வெளிப்படுத்த வில்லை; மக்களுக் குத் தெரிவிக்கவில்லை. சரியான செய்தி களை வெளிக் கொண்டுவரும் நிலைப்பாட்டில் இருந்து அவை தவறிவிட்டன. நாட்டின் சமாதான முயற்சியில் ஊடகங்களின் பங்களிப்பும் முக்கிய மானதே. அதனை அவை சரியாகச் செய்ய வேண்டும்.

பேச்சுக்கள் வெற்றிபெற இரு தரப்பும் திறந்த மனதுடன் பேச்சுக்களில் கலந்துகொள்ள வேண்டும். ஒரு சாராரது கருத்தை மற்றைய சாரார் கேட்டுப் புரிந்துகொண்டு செயற்படு வதன் மூலம் பேச்சுக்களைச் சரியான முறை யில் முன்னெடுக்கலாம்.

சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான ஏராளமான சந்தர்ப்பங்களை நாம் சரியாகப் பயன்படுத்தத் தவறிவிட்டோம்.

சமாதான காலத்தில் புலிகள் தம்மைப் பலப்படுத்திக் கொள்கிறார்கள்-ஆயுதம் வாங்குகிறார்கள் என்ற குற்றச்சாட்டு எழுகிறது. ஆயினும், அவர்கள் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் தான் கடந்த மூன்று வருடங்களாக நாட்டில் ஓர் அமைதி யான சூழ்நிலை நிலவுகின்றது.

சமஷ்டி முறையில் தீர்வு, ஒற்றையாட்சி முறையில் தீர்வு என்று அரசியல்வாதிகள் அலட்டிக்கொள்வது பொதுமக்களுக்கு விளங்கவில்லை. எப்படியான தீர்வென்றாலும் ஒரு சரியான திட்டத்தை முன்வைத்து அதன் மூலம் தீர்வு காணமுடியும். எங்கே பேசுவது என்பது முக்கியமானதல்ல. பேச்சுக்களை ஆரம்பிப்பதே முக்கியமானது.

எனவே, இரு தரப்பும் கிடைத்துள்ள வாய்ப்பைச் சரியான முறையில் கையாண்டு அதன் மூலம் இலங்கையில் நிரந்தர தீர் வொன்றை எட்டுவதற்கு அர்ப்பணிப்புடனும் விட்டுக் கொடுப்புடனும் செய லாற்றவேண்டும். இவ்வாறு செயற்பட்டால் நிச்சம் சமாதானத்தை எட்டமுடியும் - என்றார்.

(க-8)

# கிளைக்கட்டடம் நாளை திறப்பு

யாழ்ப்பாணம்,ஜன.24

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 23ஆம் இலக்கக் கிளைக்கு புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத்திறப்பு விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

கிளைக்குழுத் தலைவர் க.பழனிவேற்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் நல்லூர் ப.நோ,கூ. சங்கத்தின் தலைவர் பெ.கனகசபாபதி கட்டடத்தைத் திறந்து வைப்பார். (3)

## மரண அறிவித்தல்கள்

### கதிரவேலு அருளம்பலம்

(ஓய்வுபெற்ற சாரதி, இ.போ.ச.)

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு அருளம்பலம் 22.01.2006 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டுக்கோட்டை. (சி-47488) (54-15-12)

தகவல்: சிறீசிவகுமார் (மகன்-C.T.B)

### சங்கரப்பிள்ளை கைலாயபிள்ளை

(ஆசிரியர்)

வேலணை மேற்கை பிறப்பிடமாகவும் வவுனியா பூந்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை கையாலபிள்ளை நேற்று (23.01.2006) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.01.2006) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் மாலை 4 மணிக்கு நடைபெற்று பூதவுடல் பூந்தோட்டம் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பூந்தோட்டம், வவுனியா. (45950) (54-15-12)

தகவல்: ந. தேவன், கொக்குவில்.

## மணமகள் தேவை

யாழ்.இந்து 1965ஆம் ஆண்டு பிறந்த, (உதயத்துச் செவ்வாய்) சொந்தத் தொழில் நடத்தும் பிரித்தானிய நிரந்தரவதிவு டமையுடைய விவாகரத்துப் பெற்ற மணமகனுக்கு 32 வயதிற்கு உட்பட்ட மணமகள் தேவை.சீதனம் எதிர்பார்க்கப்பட மாட்டாது.

தொடர்பு-விளம்பர இல.2789 மே/பா உதயன். (45945)

## மரண அறிவித்தல்கள்

### பொன்னம்பலம் இராசம்மா



பூநகரியைப் பிறப்பிடமாகவும், உக்கிலான்குளம் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் இராசம்மா அவர்கள் நேற்று (23.01.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் வைத்திய கலாநிதி க.பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும் அமரர்கள் குழந்தைவேலு-பொன்னு தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் அமரர்களான சுப்பிரமணியம், நாகேந்திரம், பூநகரி வள்ளிப்பிள்ளை, வெள்ளவத்தை கிருஸ்ணசாமி (இரசாயனத் தொழிற்சாலை -பரந்தன்) ஆகியோரின் அருமைச் சகோதரியும், டாக்டர் சண்முகரத்தினம், ஸ்ரீஸ்கந்தராசா (அதிபர் சேவை, யாழ். இந்துக் கல்லூரி), கதிரநாயகி, காந்தராணி, குகதாசன் (கனடா), முருகதாஸ், முருகவேள் (சுவிஸ், பூநகரி அரிசி வெளிநாட்டு ஏற்றுமதி நிறுவனமும், ஆசிரியரும்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பாலசிங்கம் (தபாலதிபர்- செட்டிகுளம்), அமரர் தில்லையம்பலம், நகுலேஸ்வரி, சத்தியதேவி, வசந்தி (கனடா), நந்தினிதேவி (சுவிஸ் -ஆசிரியர்) ஆகியோரின் மாமி யாரும் முருகானந்தன் (நெதர்லாந்து), ஆனந்தி (ஆயுள் வேத வைத்தியர்), வத்சலா சிவரூபன் (ஆசிரியர்-செங்குந்தா இந்துக் கல்லூரி), நிமலநேசன் (ஆசிரியர்-யாழ். மத்திய கல்லூரி), ஆனந்தஸ்ரீ, பானுஸ்ரீ, சிவஸ்கந்தஸ்ரீ, நரேந்திரா (கனடா), கயல்விழி, சர்மிளா, ரகுநாதன் (ஆசிரியர்), அஞ்சனன், திலீபன், நிசாந்தினி, நிதர்சினி (வவுனியா), அபிராமி, தர்மினி (கனடா), அருளினி, அம்பலன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் தர்சன், நிருத்தனின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

28/5, திருவள்ளுவர் வீதி, உக்குளான்குளம், வவுனியா. 0244589576 0777074727 (45946) (54-15-12)

தகவல்: பொ. ஸ்ரீஸ்கந்தராசா

### இம்மானுவேல் இரத்தினசிங்கம் போல்ப்பிள்ளை



(ஓய்வுபெற்ற புகையிரத தலைமை அதிகாரி)

44/1, பழையபூங்கா வீதியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட இம்மானுவேல் இரத்தினசிங்கம் போல்ப் பிள்ளை அவர்கள் 21.01.2006 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற போல்ப்பிள்ளை -மெற்றில்டா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மரியாம்பிள்ளைசின்னையா - மரியம்மா தம்பதியரின் அன்பு மரு மகனும் எலிசபேத்ராஜேஸ்வரி (தவமணி) அவர்களின் அன்புக் கணவரும் அன்ரன் இரட்ணராஜா (லண்டன்), இரட்ணமலர் (கொழும்பு), இரட்ணமணி (லண்டன்), இரட்ணபாலன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் மரியாம்பிள்ளைஅன்ரனிப்பிள்ளை (லண்டன்), மக்சி (லண்டன்) நெஜில் (கொழும்பு), யோகராசா (லண்டன்), சந்திரா (கனடா) ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற எட்வேட் நவராஜசிங்கம் (எட்வேட்) மற்றும் ஜொய்சி (கனடா), ரஞ்சன் (பிரான்ஸ்), ராஜ்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சத்தியவதனி (ராசாத்தி), வசந்தராஜா (கனடா), பாலாம்பிகை (பிரான்ஸ்), ஜெயமலர் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (25.01.2006) புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொழும்பு பொரளை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4, புதுவீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். தொ.பே.0115516295 (45948) (54-15-12)

தகவல்: திருமதி எட்வேட் குடும்பத்தினர்.

## யாழ்ப்பாணம் மாநகரசபை
## ஆதனவரி மதிப்பீடுகள் - 2006
## பொது அறிவித்தல்

2006 ஆம் ஆண்டுக்கான யாழ்ப்பாண மாநகர சபையின் ஆதனவரி மதிப்பீட்டு பதிவேடுகள் பொது மக்கள் பார்வைக்காக அலுவலக நேரங்களில் யாழ்ப்பாண மாநகர சபை அலுவலகத்தில் (சோலைவரிக்கிளையில்) வைக்கப்படிருப்பதாக (252ம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 235 (1) பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

மாநகர அலுவலகம், யாழ்ப்பாணம். 2006.01.12 (சி-47489) (54-15-12)

சி.வி.கே.சிவஞானம், மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை அதிபர் ஐ.பாலகங்காதரன் அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி கங்காபாய் ஐயாத்துரை

22.01.2006 அன்று காலமடைந்தமையால் துயருறும் அன்னாரது குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர்கள் யா/வேலணை தெற்கு. ஐயனார் வித்தியாலயம்.

(45947) (54-15-12)


மனோகரா யாழ்ப்பாணம்
அதிரடி பொங்கல் வெளியீடு

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
(Dts நவீன ஒலிநுட்பத்துடன்)
ஆதி
இளைய தளபதி விஜய், த்ரிஷா மற்றும் பலர் நடிப்பில்
(வருகிறான் வரிப்புலி நாதியாய்)
தினசரி: பு.நே. 10.30, 1.30, 4.30, 7.30

நாதன்ஸ் யாழ்ப்பாணம்
பொங்கல் வெளியீடு
அல்டிமேட் அஜித், லைலா மற்றும் பலர் நடித்த
பரமசிவன்

காட்சி நேரம்: 9.00, 12.30, 3.30

ராஜா யாழ்ப்பாணம்
சிம்பு, ஜோதிகா,பிரகாஷ்ராஜ் நடித்த
சரவணா

இயக்கம்: K.S.ரவிக்குமார்
ரிக்கற் முற்பதிவு செய்து கொள்ளலாம்.
காட்சிநேரம்: பு.நே. 10.30, 2.15 மட்டும்

நாகம்ஸ் சுன்னாகம்

விஷால், மீராஜஸ்மினின் மற்றும் பலர் நடித்த
சண்டக் கோழி


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இலங்கை விஜயத்தின் பெறுபேறுகளை இந்தியாவுக்கு விளக்குவார் சொல்ஹெய்ம்

கொழும்பு, ஜன. 24

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வுகாணும் சமாதான நடவடிக்கைகளில் அனுசரணைப் பணியை மேற்கொண்டு இலங்கைக்குத் தாம் வரும் ஒவ்வொரு தடவையும் தமது விஜயத்தின் முடிவில் புதுடில்லிக்குச் சென்று, இலங்கையில் தாம் மேற்கொண்ட நடவடிக்கைகளின் பெறுபேறுகள் குறித்து புதுடில்லிக்கு விளக்குவதை வழமையாகக் கொண்டவர் எரிச் சொல்ஹெய்ம்.

தமது தற்போதைய விஜயத்தின்போதும் அந்த நடைமுறையை அவர் கைவிடமாட்டார் எனத் தெரிகின்றது.

இந்தத் தடவை எதிர்வரும் வியாழனன்று (நாளை மறுதினம்) இலங்கை விஜயத்தை முடித்துக்கொள்ளும் எரிக் சொல்ஹெய்ம், அடுத்த நாள் புதுடில்லி சென்று அங்கு விளக்கமளிப்பார் எனத் தெரிகின்றது.

இலங்கையிலிருந்து ஒஸ்லோ செல்வதற்கு முன்னர் புதுடில்லி செல்லும் எரிக்சொல்ஹெய்ம் அங்கு இந்திய வெளியுறவுத்துறைச் செயலர் ஷியாம் சரணைச் சந்தித்து இலங்கையின் அமைதி முயற்சிகள் குறித்து விளக்கமளிக்கவுள்ளார் என நேற்றுக் கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரக வட்டாரங்கள் ஊர்ஜிதம் செய்தன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியின் கீழ் இலங்கை அரசு வந்த பின்னர் அமைதி முயற்சிகள் குறித்து நோர்வே அனுசரணையாளர்களால் புதுடில்லி அறிவுறுத்தப்படுவது இது முதற்தடவையாகும்.

இன்று கொழும்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அரசியற் கட்சிகளின் தலைவர்களைச் சந்திக்கவுள்ள எரிக் சொல்ஹெய்ம் நாளை வன்னியில் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களைச் சந்திக்கவுள்ளார். (க-3)

## இந்தியத் தூதுவரை கண்டித்து கொழும்பில் நாளை பேரணி

இந்தியத் தூதுவர் திருமதி நிருபமாராவின் நடவடிக்கைகளை கண்டித்து நாளை இந்தியத்தூதரகத்துக்கு முன்னாள் கண்டனப் பேரணி ஒன்று நடைபெறவுள்ளது.

இந்தப் பேரணியை இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணி, தொழிலாளர் விடுதலை முன்னணி, மேலக மக்கள் முன்னணி ஆகிய அமைப்புகள் இணைந்து நடத்தவுள்ளன.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸை அரசுடன் இணைப்பதற்கு இந்தியத் தூதுவர் அரசுக்கு அழுத்தம் கொடுக்கிறார் என்றும் -

இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளித் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் பல்வேறு அமைப்புகள் இருந்தும் அவற்றுடன் தூதுவர் பேச்சுகளை நடத்தவில்லை என்றும் - தமது கண்டனத்தைத் தெரிவிக்கவே இந்த அமைப்பினர் இந்தக் கண்டன ஊர்வலத்தை நடத்தத் திட்டமிட்டுள்ளனர்.

## கொழும்பில் பல....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்புடைய பல்வேறு விடயங்கள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டிருக்கிறது.

நேற்று இரவு, அமெரிக்கத் தூதுவரின் இல்லத்தில் இடம்பெற்ற இராப்போசன விருந்துபசாரத்தின்போது தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளின் தலைவர்களையும் அமெரிக்க அரசியல்துறை இணை அமைச்சர் சந்தித்துப் பேச்சுகளை நடத்தினார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னதாக நேற்றுப் பிற்பகல் இலங்கை அமைதி முயற்சிகளுக்கான நோர்வே அனுசரணைக் குழுவின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்மையும் சந்தித்த அமெரிக்க அரசியல்துறை இணையமைச்சர் நிக்கலஸ்பேர்ண், அமைதி முயற்சிகளின் பிந்திய நிலைமைகள் குறித்து அவரிடம் கேட்டறிந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க-3)

## சாவகச்சேரியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யத்தில் இருந்து சாவகச்சேரி சந்தையில் பொருள்கள் வாங்க வந்தவர் என்றும் -

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதவர்கள் இவ்வரைச்சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவத்தைத் தொடர்ந்து படையினர் ஆகாயத்தை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர்.

இதில் சந்தையில் நின்ற நுணாவில் மேற்கைச் சேர்ந்த தேவராசா யசோதா (வயது 21) என்ற யுவதி காயமடைந்தார். அவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். (3-117-31-15-204)

## ரியூட்டறி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கதைத்துக்கொண்டிருக்கும் போதே மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத துப்பாக்கி நபர்கள் சுட்டுவிட்டுத் தப்பிச்சென்றனர்.

இச்சம்பவத்தில் கொலை செய்யப்பட்டவரின் நண்பரான ஜெயதாஸ் சூட்டுக்காயங்களுக்கு இலக்காகி வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா மாவட்ட நீதிவான் மாணிக்கவாசகம் இளஞ்செழியன் விசாரணைகளை மேற்கொண்டார். (3-6-164)

## முத்திரைச்சந்தி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரியாலையைச் சேர்ந்த பரஞ்சோதி தீபன் ஆகியோர் முத்திரைச் சந்தியில் நின்ற படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தனர்.

இந்தக் கொலை தொடர்பான விசாரணை நேற்று யாழ். நீதிமன்றத்தில் இடம்பெற்றது.

பிரஸ்தாப இரு இளைஞர்களும் படையினர் மீது கிரனேட் வீச முயன்றனர் என்றும்-

அதனால் படையினர் அவர்களை சுட வேண்டிய நிலை ஏற்பட்டது என்றும்- பொலீஸ் தரப்பினர் நீதிவானிடம் தெரிவித்தனர்.

பிரஸ்தாப இளைஞர்கள் வீச முற்பட்ட கிரனேட்டும் மீட்கப்பட்டது என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

பொலீஸார் தெரிவித்த விடயங்களில் திருப்தியடையாத நீதிபதி சந்தேகநபர்களான படையினரை அடுத்த பத்து நாள்களுக்குள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு உத்தரவிட்டார். (3)

## வசாவிளானில் சார்ஜன்ட் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம்,ஜன.24

பலாலி வசாவிளான் 10ஆவது தொண்டர் கெமுனு படையணியின் முகாமில் நேற்றுமுன்தினம் மாலை இராணுவ சார்ஜன்ட் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் அந்த முகாமில் பணியாற்றும் லான்ஸ் கோப்ரல் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

54 வயதுடைய 5 பிள்ளைகளின் தந்தையான விக்கிரமசேகர என்னும் சார்ஜன்ட் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அவரின் உடம்பில் 8 துப்பாக்கிச் சூட்டுக்காயங்கள் காணப்படுவதாக பலாலி பொலீஸார் தெரிவித்தனர்.

தனக்கு விடுமுறைக்கான அனுமதியை வழங்காததாலேயே சார்ஜன்ட் மீது லான்ஸ் கோப்ரல் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகக் கூறப்படுகிறது.

துப்பாக்கிச் சூட்டினை நடத்திய பின்னர் சந்தேகநபர் இராணுவ பொலீஸாரிடம் சரணடைந்துள்ளார். பின்னர் அவர் பலாலி பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (3)

## இரு சிப்பாய்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேனை வீதியில் வீதிக் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரே கிளைமோர் தாக்குதலுக்கு இலக்காகினர்.

மரத்தில் பொருத்தப்பட்டிருந்த கிளைமோர்க் குண்டே வெடித்து இராணுவத்தினர் சென்ற வாகனத்தைத் தாக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சம்பவத்தையடுத்து மட்டக்களப்பு - வாழைச்சேனை பிரதான வீதி ஊடான போக்குவரத்து சில மணிநேரம் தடைப்பட்டிருந்தது.

உபுல் சந்தன (வயது - 33 ), ஆர். தென்னக்கோன் (வயது - 38), குலேந்திரகுமார் (வயது - 36) ஆகியோரே கொல்லப்பட்டவர்களாவர். எஸ். துரைராஜா (வயது - 38), கே. காமினி (வயது - 41) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தைஅடுத்து இராணுவத்தினரும், பொலீஸாரும் இணைந்து ஊறணி, இருதயபுரம் பகுதிகளில் சுற்றிவளைப்புத் தேடுதலொன்றை நடத்தினர். (க-3)

## எங்குபேசுவது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

நாட்டில் வன்முறைச் சம்பவங்களும், குண்டுத் தாக்குதல்களும், அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுவதும் அதிகரித்துள்ளன. இவை கடும் விசனத்தை ஏற்படுத்துகின்றன.

என்றாலும், இந்த நாட்டில் இன்னும் முழுமையான யுத்தம் ஏற்படவில்லை என்பது கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய ஒன்று.

இந்தக் கொலைகளுக்கும், வன்முறைகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். அல்லது வன்முறைகளைத் தணிக்கச் செய்ய வேண்டும். எனது இந்த விஜயத்தின் ஊடாக நான் இதைத்தான் அடைய விரும்புகிறேன்.

அத்துடன், யுத்தநிறுத்த உடன்படிக்கையை எவ்வாறு ஸ்திரப்படுத்தலாம் என்பது குறித்தும் நான் இரண்டு தரப்பினருடனும் விரிவாக ஆராய இருக்கிறேன்.

நான் உங்களுக்கு நினைவு படுத்த விரும்புவது என்னவென்றால், இந்த வன்முறைகள் மிகவும் கொடூரமானவையாகப் பரந்த அளவில் இடம்பெற்று வந்தாலும் இங்கு ஒரு முழுமையான யுத்தம் இன்னும் ஏற்படவில்லை என்பதுதான்.

இரண்டு தரப்பினருமே இந்த வன்முறையை தவிர்ப்பதில் முனைப்பாக இருக்கின்றன. இதை என்னால் உறுதியாகக் கூறமுடியும்.

அதேவேளை, கொழும்பு வந்திருக்கும் அமெரிக்க அரசியல் விவகாரத்துணை அமைச்சர் நிக்கலஸ் போர்ன்ஸை நேற்றுமாலை அமெரிக்கத் தூதரகத்தில் வைத்துச் சொல்ஹெய்ம் சந்தித்து நீண்டநேரம் கலந்துரையாடினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க-3)

## கிளிநொச்சி வந்தடைந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அண்டிய ஹோட்டலொன்றில் பாதுகாப்பாகத் தங்கவைக்கப்பட்டனர். பின்னர் காலை எட்டு மணிக்கு இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான விசேட ஹெலிகொப்டரில் கிளிநொச்சி நோக்கி அவர்கள் புறப்பட்டனர்.

பாலசிங்கம் தம்பதியினரை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வரவேற்று வன்னி செல்லும்வரை அவர்களுக்குத் தேவையான ஏற்பாடுகளை கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் கவனித்தார். பாலசிங்கம் தம்பதியினர் மற்றும் புலிகளின் பிரமுகர் சாந்தன், கொழும்புக்கான நோர்வேத் தூதரகத்தின் அதிகாரியொருவர் ஆகியோருடன் கட்டுநாயக்காவிலிருந்து கிளிநொச்சிக்குப் புறப்பட்ட ஹெலிகொப்டர் காலை 9 மணியளவில் (வன்னி நேரப்படி) கிளிநொச்சியை வந்தடைந்தது.

கிளிநொச்சியில் பாலசிங்கம் தம்பதியினரை புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், தமிழீழக் காவல் துறைப் பொறுப்பாளர் பா. நடேசன், நீதி, நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா, புலிகளின் முக்கியஸ்தர் கா.வே. பாலகுமாரன், கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை, மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழினி,கேணல் ஜெயம்,கேணல் ரமேஷ், கேணல் யாழினி, கேணல் துர்க்கா, கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் ஆகியோருட்பட தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள் வரவேற்றனர்.

அங்கு செய்தியாளரிடம் கருத்து வெளியிட்ட அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், தேசியத் தலைவருடனான சந்திப்பின் பின்னர் புதன் கிழமை நோர்வே விசேட பிரதிநிதியுடன் பேச்சுகள் நடத்தப்படுமென்றும், அதன் பின்னர் செய்தியாளர்களுக்கு விவரமறிவிக்கப்படும் எனவும் கூறினார்.(க-3)

## வன்முறைகள் ஊடாகத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துணை அமைச்சர் நிக்கலஸ் பேர்ன்ஸ்.

கொழும்பு கோல்பேஸ் ஹோட்டலில் நேற்றுச்செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் உள்ள தமிழ் சமுதாயத்தினருக்கு, மக்களுக்குச் சட்ட ரீதியலான அபிலாஷைகள், அரசியல் ரீதியான அபிலாஷைகள் நிறைய இருக்கின்றன என்பதை நாம் நன்கு அறிவோம். அது அரசால் முறையாக அணுகப்பட வேண்டும் என்பதையும் நாம் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதற்காக நல்ல ஒரு முறையில் பேச்சுகள் நடத்தப்படவேண்டும். அப்போதுதான் அபிலாஷைகள் நிறைவேற்றப்படும். நிரந்தர சமாதானம் நிலவும். அதுதான் அமெரிக்காவின் விருப்பம்.

ஆனால், இதில் பெரும்பாலான பொறுப்பு புலிகளையே சார்ந்துள்ளது. ஏனெனில், அந்த அமைப்புதான் வன்முறை ஊடாக அரசியல் இலக்கை அடைய முனைகின்றது. - என்று கூறினார் நிக்கலஸ் பேர்ன்ஸ்.

நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனும், வெளிநாட்டு அமைச்சர் மங்கள சமர வீரவுடனும் பேச்சுகளை அவர் நடத்தினார்.

அரசுத் தரப்பினால் இயக்கப்படுவதாகக் கூறப்படும் துணைப்படை விவகாரம் குறித்தும் நிக்கலஸ் பேர்ன்ஸ் கருத்துத் தெரிவித்தார். அது குறித்து அவர் கூறியதாவது:-

அரச தலைவர்களுடன் நான் நடத்திய பேச்சுகளின்போது, எடுத்துக் கூறப்பட்ட முக்கியமான விடயங்களுள் துணைப்படை குறித்த விடயம் முக்கியமானது. இத்தகைய படைக்கு உத்தியோகபூர்வமாக உதவிகள் வழங்குவதை நிறுத்த அரசு ஏதுவான வழிவகைகளைச் செய்யவேண்டும்.

அத்துடன், தமிழர்களுக்கு எதிரான தாக்குதல்களில் அரச படைக்குப் பங்கு இருக்கக் கூடாது. அவ்வாறு தொடர்பு இருக்கும் சந்தர்ப் பத்தில் சம்பந்தப்பட்டோர் நீதியின் முன்நிறுத்தப்படவேண்டும் எனவும் நான் அரச தலைவர்களுக்கு எடுத்துக் கூறினேன் - என்றார் நிக்கலஸ் பேர்ன்ஸ். (க-3)

LOGIC
2008 A/L
R.S.சந்திரன்
Sat. Sun. 6.30 a.m
ராகவன் சங்கானை.

LOGIC - P. கமல்
A/L -2007
குறியீட்டு அளவையியல்
பகுதி II
செவ். வியா. 4-6 p.m.(N.T)
ஆரம்பம்.
24.01 - 2006 4.p.m.
2008, 2006 PAPER
வகுப்புக்கள்
நடைபெறுகின்றன.
திகழ் கல்வி நிறுவனம்
கே.கே.எஸ். வீதி,
இணுவில்

## மரண அறிவித்தல்

### நவரத்தினம் அன்னம்மா

சுன்னாகம் தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நவரத்தினம் அன்னம்மா காலமானார்.

அன்னார் நவரத்தினத்தின் அன்பு மனைவியும் லிங்கேஸ்வரனின் அன்புத் தாயும் ஜெயராணியின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.01.2006) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சுன்னாகம் பூவோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம். (சி-47492)

தகவல்:
லிங்கேஸ்வரன் (மகன்).

## திருமண வைபவம் பிற்போடல்

சத்தியன் - தாரணி ஆகிய இருவருக்கும் நாளை (25.01.2006) புதன்கிழமை முற்பகல் 8.18 முதல் 9.54 மணி வரையிலுள்ள சுபவேளையில் நாயன்மார்கட்டு ஸ்ரீ ராஜராஜேஸ்வரி (பேச்சி) அம்பாள் ஆலய மண்டபத்தில் நடைபெற இருந்த திருமண நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.

*தகவல்:*
திருமதி வேல்முருகன் - நாகேஸ்வரி
*திருவள்ளுவர் மனை,*
*செட்டியார் குறிச்சி,*
*பண்டத்தரிப்பு.*

(சி-47491)

கணனிக் கல்வித்துறையில்
செய்முறைப் பயிற்சிக்கென்றே
பிரத்தியேகப்படுத்தப்பட்டு
புதிய
விடிவெள்ளியொன்று
வெகுவிரைவில்
எமது தாயக மண்ணில்
விவரங்களுக்கு நாளைய
தினசரியைப் பாருங்கள்

இதோ துரிதமான சேவை!
தமிழ், ஆங்கிலம் கணனியில் ரைப்செற்றிங் செய்து கொள்ளவும், ஸ்கானிங், லேசர், கலர் பிறிண்ட், ரென்சில் கட்டிங், பொலிமர் சீல்கள், ஹோணியோ ஆகிய வேலைகளையும், ஆய்வுக் கட்டுரைகள் பல்கலைக்கழக விதிமுறைகளுக்கு அமைவாக குறுகிய நேரத்தில் பயின்டிங் செய்து கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.
ராஜ் கொம்பியூட்டர் பிறிண்டிங் சென்ரர்
43, பலாலி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
(45941)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.01.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org